விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

திங்கள் முதல் வெள்ளிவரை 'தமிழ் நாதம்' உங்கள் கைகளில்...

இராகம் 01 | தாளம் 11 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 20 புதன்கிழமை (04.07.2012) | பக்கங்கள்: பதினாறு

## மூதூரில் கொல்லப்பட்ட 17 தொண்டு நிறுவன ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு

### பிரான்ஸ் தூதரகம் அழுத்தம்

2006ஆம் ஆண்டு மூதூரில் கொலை செய்யப்பட்ட தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேரின் குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடு வழங்குமாறு வேண்டியதன் அவசியத்தை கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகம் வலியுறுத்தியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரான்ஸின் "பட்டினிக்கு எதிரான அமைப்பு என்ற அரசசார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிவந்த இந்த 17 பேரும் மூதூரில் படையினருக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின்போது கொல்லப் பட்டிருந்தனர். திருகோணமலையில் அதே வருடத்தில் மற்றுமொரு சம்பவத்தில் 5 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடை-பெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமை-கள் கூட்டத் தொடரின்போது, அரசாங்க தூதுக்குழுவினர், இவ்விரு சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கும் சம்மதித்தனரெனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மீண்டும் விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு சட்டமா அதிபர் திணைக்களம்

02



ஆடி நிலா ஓடி வா என்ற தலைப்பில் வட மாகாண கல்வித்திணைக் களத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு கல்வி வலயம் ஏற்பாடு செய்திருந்த கலைவிழா நிகழ்வில் இரு கைகளும் இல்லாத மாற்றுத் திறனுடைய மாணவி காலினால் ஓகன் இசைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: வவுனியாதிருமர்)

# ஆட்கடத்தலுக்கான இடைத்தங்கல் நிலையமாக இலங்கை



### குடிவரவு, குடியகழ்வு பணியக அதிகாரி தகவல்

மனிதக் கடத்தலுக்கு இலங்கை ஒரு இடைத்தங்கல் நிலையமாக பயன்படுத்தப் படுவதாக தேசிய கடத்தல் முறியடிப்புப் பிரிவின் தலைவர் பிரபாத் அளுத்கே கூறியுள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுக ளைச் சேர்ந்தவர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கான இடைத்தங்கல் நிலையமாக இலங்கையை அடையாளம்கண்டுள் ளனர். இது ஒரு புதிய போக்காகும்" என குடிவரவு, குடியகல்வு பணியகத்தின் கடத்தல் முறியடிப்பு பிரிவின் தலைவரான பிர பாத் அளுத்கே தெரிவித்தார்.

ஆட்கடத்தலை தடுப்பது தொடர்பாக இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உயிர்புள்ளியியல் அடிப்படையிலான கடவுச்சீட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் ஆட்கடத்தலை கட்டுப்படுத்த இது உதவும் எனவும் அவர் கூறினார்.

## தேர்தல்கள் ஆணையாளருடன் சந்திப்பு

அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பு தேர்தல்கள் செயலகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடமபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து கலந்துரையாடவே தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் இச்சந்திப்புக்கு அழைப்பு

02

## மண்டைதீவில் குடிநீர் தட்டுப்பாடு

மண்டைதீவு குடிநீர் விநியோகம் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களுக்கு உட்படுவதாகக் கூறுகின்றனர். அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுக்கு குழாய் மூலம் நீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. அடிக்கடி நீர் விநியோகம் தடைப்படுவதாகவும் சிலரது விஷமத்தனமே குடிநீர் விநியோகம் தடைப்படக் காரணம் எனவும் மக்கள் விசனமடைந்துள்ளனர். அல்லைப்பிட்டி மண்டைதீவுக் கிடைப்பட்ட கடல் பகுதியூடாக குழாய்கள்

02

## 6 மாதத்தில் 1,346 இலங்கையர் அவுஸ்திரேலியாவில் தஞ்சம்

### கடந்த வருடம் 211 பேர் மட்டுமே சென்றனர்.

கடந்த மூன்று வாரங்களாகப் படகுகள் மூலம் அகதிகளாக அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்த இலங்கையர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் முழுவதும் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்குகளாக அதிகரித்துள்ளது.

இவ் வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 1,346 இலங்கையர்கள் அவுஸ்திரேலியக் கரையை வந்தடைந்துள்ளனர். கடந்த வருடம் முழுவதும் 211 சட்டவிரோதக் குடியேறிகளே இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர். இது ஆறு மடங்குக்கும் அதிகமானதாகும்.

2009ஆம் ஆண்டு இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் படகுகள் மூலம் சென்று அகதி அந்தஸ்துக்

02

## வவு. சிறை விவகாரம்: கொழும்பில் இன்று கலந்துரையாடல்

வவுனியா சிறைச்சாலை சம்பவங்களின் பின்னரான நிலைமையை பற்றி ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், இந்த விவகாரத்தில் அக்கறை கொண் டுள்ள செயல்பாட்டாளர்களினதும் அவசர சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02

## கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டது ஏன்?

### சங்கம் கேள்வி

"இந்த வருடத்துக்கான பட்டதாரிகள் நியமனத்தில் யாழ் மாவட்டத்தில் மட்டும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர் தேசிய வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள், பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதனால் யாழ் மாவட்ட உயர்தொழில் நுட்பவியல் நிறுவனம் மூடப்படக்கூடிய ஆபத்து உள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட உயர்தேசிய கணக்கியல் மற்றும் வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிக்கை வருமாறு, 1990 ஆம்

02

## இடர் பற்றாக்குறையால் புதியதாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் அவதி

வலிகாமம்

புதிய பட்டதாரிகள் நியமனத்தின் கீழ் பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு இருப்பதற்கு கூட சீரான இடமற்ற நிலை காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு புதிய நியமனங்கள் கடந்த திங்கள் கிழமை வழங்கப்பட்டுள்ளது. உடனடியாக குறிப்பிட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குச் சென்று கடமையைப் பொறுப் பேற்கும் படியும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க

02

## ஈராக்கில் குண்டுவெடிப்பு 32 பேர் உயிரிழப்பு



ஈராக்கில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் தாக்குதல்களில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

லொறியொன்றில் பொருத்தப்பட்ட

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# கிளிநொச்சியில் 1180 பெண்களுக்கு சுயதொழில் வேலைவாய்ப்பு வசதி

## 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 236 கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக 1180 பெண்கள் தேர்ந்தெடுக்க ப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தினகரனுக்குத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷவின் வழிகாட்டலில் வட மாகாண சபையின் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

சுயதொழில் வாய்ப்பு. பெண்களின் பொரு ளாதார துறை மேம்பாடு.

திறனபிவிருத்தி. போன்ற அடிப படையிலேயே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்க ப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 236 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஒரு சங்கத்துக்கு ஐவர் என்ற அடிப்படையில் 1180 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்குத் தேவையான கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு ஐம்பதாயிரம் ரூபா தொடக்கம் 75 ஆயிரம் ரூபா வரை கடன் உதவி வழங்கப்படவுள்ளனது.

சுயதொழில் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு உற்பத்தி, பொதி செய்தல், விற்பனை தொடர்பான பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன. தேசிய உணவு உற்பத்தி சபையின் ஒத்துழைப புடன் இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. சுயதொழில் அனுபவம், திறமை உள்ளவர்களே இந்த திட்டத்தின் மூலம் உள்வாங்கப்படவுள்ளனர்.

தற்பொழுது ஆரம்பிக்கப்படவுள்ள வேலைத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலும் 1180 பேர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இதேவேளை வடக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் இந்த திட்டத்தை ஆரம்பிக்க திட்டமி ட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சுழல் காற்று: 233 பேர் பாதிப்பு 88 வீடுகள் சேதம்

நாட்டின் பல பாகங்களிலும் வீசும் சுழல் காற்று காரணமாக இதுவரை 233 பேர், பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சுழல் காற்றினால் இதுவரை 88 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.தற்போது நிலவும் சுழல் காற்றுடன் கூடிய மழை காலநிலை நீடிக்கும் என வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறைமாவட்டமாக மட்டக்களப்பு பிரகடனம்

கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறைமாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரினால் பிரகடனப்படுத் தப்பட்டது.

சுமார் 117 வருடங்களாக திருகோணமலை மறைமாவட்டத் திற்குள்ளேயே மட்டக்களப்பு, அம்பாறை நிர்வாக மாவட்டங்கள் உள்ளடங்கியிருந்தன.

இந்நிலையில் மட்டக்களப்பு புதிய மறைமாவட்டம் வத்திக்கான் நேரப்படி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு (இலங்கை நேரம் பிற்பகல் 3.30 மணி) வத்திக்கான் திருக்கூடத்தில் பரிசுத்த பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பரினால் பிரகடனம் செய்யப்பட்டது.

நீண்ட காலமாக மட்டக்களப்பு - அம்பாறை கத்தோலிக்க மக்களாலும் துறவற சபைகளாலும் இலங்கைத் திருச்சபையினூடாக பாப்பரசருக்கு விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையின் பயனாகவே இப்புதிய மறைமாவட்டம் உருவாக்கப் பட்டதாக மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க அருட்தந்தையொருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் தொடக்கம் திருகோணமலை மறைமாவட்டம் தனியாகவும் மட்டக்களப்பு மறைமாவட்டம் தனியாகவும் நிர்வாக ரீதியாக இயங்கவுள்ளதுடன் திருகோணமலையின் ஆயராக அதி வணக்கத்திற்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினாலும் மட்டக்களப்பு மறைமாநிலத்தின் முதல் ஆயராக அதி வணக்கத்திற்குரிய பொன்னையா ஜோசப் ஆண்டகையும் இறை பணி புரிவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வறிவிப்பு வெளியானதும் வழக் கப்படி பங்கு ஆலயங்கள் அனைத்திலும் மணி ஒலிக்கப் பட்டது.

## கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ..(தொடர்)

ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிய பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 46/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறிப் பிடப்பட்டுள்ள நான்கு வருட காலப்பகுதிகளைக் கொண்ட மேற் படி இரண்டு கற்கைநெறிகளும் பல் கலைக்கழக வர்த்தமானிப் பட்டத் தின் சாதாரண சித்திக்கு சமனானது. (சுற்றுநிருபத் தொடரிலக்கம் III,V) எனக் குறிப்பிட்டுள்ளது அதற்கமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அன்றுதொடக்கம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவன NDA, HNDC/HNDM பட்டதாரிகளுக்கு அனைத்து அரச நியமனங்களும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

இதற்கமைய பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2012 ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுனர் நியமனத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்திருந்தனர். எனினும் கடந்த முதலாம் திகதி உள்ளூர் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அரச அதிபரின் நியமனம் தொடர்பான அறிவித்தலின் பிரகாரம் மேற்படி பட்டதாரிகள் அனைவரது நியமனங்கள் புறக்கணிக்கப்பட்டமை தெரியவந்தது. பாதிக்கப்பட்ட நாம் உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளர் ஆகியோரை நேரில் சந்தித்து இவ்விடம் தொடர்பாக கலந்துரையாடினோம். குறிப்பிட்ட சில தொழிற்தகமைகளிற்கான நியமனத்தின் போது மட்டுமே எமது பட்டதரிகள் உள்வாங்கப்படலாம் எனவும் தற்போது வழங்கப்படும் நியமனத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட முடியாது எனவும் அவர் கூறினார். அப்போது எமது பிரதிநிதிகள் ஏனைய மாவட்டங்களில் இத் திட்டதின்கீழ் மேற்படி பட்டதாரிகளுக்கு நியமனம் வழங் கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினர். அப்போது ஏனைய மாவட்ட நியமனங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக கூறியிருந்தனர். எனினும் அதன்பின்னரும் ஏனைய மாவட்டங்களில் 2010, 2011 .N.D.A, H.N.D.M. பட்டதரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 45,000 பட்டதாரிகள் நியமனத்தின்போது எமது பட்டதரிகள் உள்வாங்கப்பட்டிருந்தனர் அத்தோடு 2008 ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனத்திலும் 2011 ஆம் ஆண்டு வட மாகாண சபை பட்டதாரி நியமனத்திலும் உள்வாங்கப் பட்டுள்ளனர். இவ்வாறு இருக்கையில் 2012 ஆம் ஆண்டு பட்டதாரி நியமனத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் எமது பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

நாம் புறக்கணிக்கப்பட்டதை அடுத்து எமக்கு நியமனம் வழங்கக் கூறி அமைதிப் பேரணியாகச் சென்று யாழ். அரச அதிபருக்கும் ஜனாதிபதிக்குமான இரண்டு மகஜர்களை கையளித்தோம் அதனைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர் உங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுமென உறுதியளித்திருந்தார். இருந்தபோதிலும் மறுநாள் பத்திரிகைகளில் எமக்கான நியமனம் பின்னர் அறிவிக்கப்படும் எனக்கூறி எம்மை ஏமாற்றத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளார்.

எமது பட்டதாரிகள் கடந்த காலங்களில் அனைத்து நியமனங்களுக்குள்ளும் உள்வாங்கப்பட்டமை சுற்றுநிருபங்களின் அடிப்படையில் மேற்படி கற்கை நெறிகளை பூர்த்திசெய்து நியமனத்திற்கு காத்திருக்கின்றபோது எவ்வித முன்னறிவித்தலுமின்றி பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தமது சுற்றுநிருபத்திற்கு மாறாக எமக்கு நியமனம் வழங்க மறுப்பது அநீதியான செயலாகும். யாழ்மாவட்ட உயர் தொழில்நுட்பவியல் நிறுவனமானது இம் மாவட்ட மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கின்ற நிலையில் மேற்படி பிரதான இரு கற்கைநெறிகளை பூர்த்திசெய்த பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க மறுப்பதானது எதிர்காலத்தில் இக் கல்விநிலையம் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவ் விடயத்தில் ஏனைய மாவட்டங்களைக் காட்டினும் யாழ். மாவட்டமே பெரிதும் பாதிக்க பட்டுள்ளதால் அனைத்து புத்தி ஜீவிகளும் கவனமெடுத்து எமக்கான நியமனத்தை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஈராக்கில் குண்டுவெடிப்பு...(தொடர்)

குண்டு திவானியா எனப்படும் பிரபல சந்தையொன் றில் வெடித்ததால் 25 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் சுமார் 70 பேர் காயமடைந்தனர். அதேவேளை வேறு சில இடங்களில்

இடம்பெற்ற தாக்குதல்களில் 7 பேர் உயி ரழந்துள்ளனர்.

25 பேர் உயிரிழந்ததாக திவானியா நகரிலுள்ள வைத்திய சாலை அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

இறந்தவர்களில் பெண்கள் மற்றும் சிறார்களும் அடங்குகின்றனர். 15 கடைகளும் இக்கு ண்டு வெடிப்பினால் சேதமடைந்தன.

சுமார் 440,000 பேர் வசிக்கும் திவானியா நகரில் மேற்படி சம்பவத்தையடுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## இடபற்றாக்... (தொடர்)

அதிபார் காரியாலயங்களில் பெரும் எண்ணிக்கையான ஊழியர்களை உள் வாங்குவதற்கு வேண்டிய தளபாட வசதிகள் இல்லாது உள்ளன. வசதிகளும் பிரதேச செயலகங் கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் போதாதுள்ளன.

இந்நிலமையில் இந்த புதிய நியமனம் பெற்ற பட்டதாரிகள் தமது அலுவலகக் கடமைகளை மேற் கொள்வதில் இடர்பாடுகள் உள்ளன.

## தேர்தல்கள்...(தொடர்)

விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தேர்தல் நடைபெறவுள்ள மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளை சந்திக்கவுள்ளார்.

## மண்டைதீவில்... (தொடர்)

செல்லுகின்றன இப்பகுதியில் குழாய்கள் தரையின் மேலாகக் காணப்படுகின்றன.

குழாய் நீர் விநியோகம் தடைப் பட்டதால் வேலணை பிரதேச சபை பௌசர்கள் மூலம் குடிநீரை மண்டை தீவுக்கு விநியோகிக் கிறது. எனினும் இது மக்களுக் குப் போதுமானதாக இல்லை. கடந்தமுறை ஊர்காவற்றுறை பிரதேச அபிவிருத்திக் கூட்டத்திலும் மண்டைதீவு தண்ணீர்ப் பிரச்சினை சுட்டிக் காட்டப்பட் டது. (ப)

## வவு.சிறை... (தொடர்)

அனைத்து தமிழ் எம்.பிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும், கட்சிகளின் பிரதிநிதிகளையும், சிவில் சமூக செயல்பாட்டாளர்களையும் இந்த சந்திப்பில் தவறாமல் கொள்ளும்படி மக்கள் கண்காணிப்பு குழு ஏற்பாட்டாளர் மனோ கணேசனும், இணைத்தலைவர் சிறிதுங்க ஜயசூரியவும், ஐ.தே.கவின் துணை செயலாளர் மற்றும் கட்சியின் மனித உரிமை பொறுப் பாளர் ஜெயலத் ஜெயவர்த்தன எம்.பி. யும் விடுத்துள்ள கூட்டு அழைப் பில் கோரியுள்ளனர்.

## மூதூரில் கொல்லப்பட்ட... (தொடர்)

அறிவுறுத்தியுள்ளது. பொலிஸார் மீள் விசாரணையை ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்த கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகம், இவ்வழக்குகளின் விசாரணையின் முன்னேற்றம் பற்றி சட்ட மா அதிபர் திணைக் களத்திடம் விசாரணை செய்தது. இதன்படி கொலை செய்யப்பட்ட தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரி களுடனான சந்திப்பின்போது, பிரெஞ்சு தூதுவர் கிறிஸ்ரின் ரிபிச்சொன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் பரிந்துரைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதன் மூலம் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை தவிர்த்துக்கொள்ள முடியுமென திணைக்கள அதிகாரியொருவர் கூறினார். இது தொடர்பாக பல சர்வதேச அமைப்பு களின் முன்னிலையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச பொதுமன்னி ப்புச்சபை இப் பிரச்சினையை எழுப்பியிருந்தன.

## 6 மாதத்தில்... (தொடர்)

கோரியவர்களின் எண்ணிக்கை 736 ஆகும். 2010 இல் 536 இலங்கையர்கள் படகுகள் மூலம் அவுஸ்திரேலியக் கரையை வந்தடைந்தன.

பெரும்பாலானவர்கள் இலங்கையிலிருந்தே வந்தார்கள். தற்போது தென்னிந்தியாவிலுள்ள இலங்கையர்களின் அகதி முகாம்களிலிருந்து அதிகமானோர் வரும் போக்குக் காணப்படுகிறது.

## இன்றைய இராசி பலன் (04.07.2012)

நந்தன வருடம் ஆனித் திங்கள் 20ஆம் நாள் புதன்கிழமை

நட்சத்திரம்: பூராடம் பிற்பகல் 3.58வரை அதன்பின் உத்தராடம்
திதி: பிரதமை இரவு 11.18 வரை அதன்பின் துதியை
சுபநேரம்: 4.27-5.57 இராகுகாலம் 11.57 - 1.27
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : மனக்குழப்பம், சிரசு ரோகம், பிரயாணச் சோர்வு
**இடம்** : பொருள் இழப்பு, வாகன சுகக்குறைவு, போக்குவரத்தில் கவனம் தேவை
**மிதுனம்**: தேக ஆரோக்கியம், போசன சுகம், நண்பர் உதவி
**கடகம்** : எதிர்பாராத வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தல யாத்திரை
**சிங்கம்** : வீண்செலவு, தேக நலக்குறைவு, எதிரிகளால் தொல்லை.
**கன்னி** : மனச்சஞ்சலம், ஏமாற்றப்படுதல், யோசனை மிகுதி
**துலாம்** : பொருள் வரவு, சுபகாரியச் செலவு, தேக ஆரோக்கியம்
**விருச்சிகம்**: கடன்படுதல், தொழில் கஷ்டம், வாக்குக் கலகம்.
**தனுசு** : பணப்புழக்கம், உல்லாசப் பயணம், தூர இடத்து நற்செய்தி
**மகரம்** : காலில் ரோகம், பிரயாணக் கஷ்டம், வாகன சுகக் குறைவு
**கும்பம்** : பணவரவு, தொழில் விருத்தி மனமகிழ்ச்சி
**மீனம்** : புதுமுயற்சி, போசன சுகம், அந்நியர் உதவி

*- ஜோதிடர் பால. இரத்தினசேகர்*

### நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம்:

# இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் அரசுக்கு ஜீ.எல்.பீரிஸ் விளக்கம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பரந்தளவிலான சிபாரிசுகள் தொடர்பான அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து ஜப்பானிய அரசாங்கத்திற்கு நேற்று முன்தினம் இலங்கை விபரித்தது.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜப்பானிய பிரதிப் பிரதமர் கட்சுயா ஒகாடாவை டோக்கியோ நகரில் சந்தித்து இது குறித்து விபரித்தார் என ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க விடயங்கள் தொடர்பாக இலங்கையுடன் நெருக்கமான ஒத்துழைப்பை ஜப்பான் எதிர்பார்ப்பதாக ஜப்பானிய பிரதிப் பிரதமர் தெரிவித்தார். கடந்த 60 வருடகாலத்தில் இலங்கையும் ஜப்பானும் கொண்டிருந்த உறவுகள் எதிர்வரும் காலத்தில் மேலும் வலுவடையும் என தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கொய்சிரோ கேம்பாவைவையும் அமைச்சர் பீரீஸ் சந்தித்து பேசினார்.

# திருகோணமலை துறைமுகத்தில் பிரான்ஸ் கடற்படைக் கப்பல்



பிரெஞ்சு கடற்படை கப்பலான "டுபே டி லோம்", நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. திருகோணமலை துறைகத்திற்கு இத்தகைய விஜயமொன்றை பிரெஞ்சு கடற்படை கப்பலொன்று வந்தமை இதுவேமுதல் தடவை என இலங்கை கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வை குறிக்கும்முகமாக இக்கப்பலின் கட்டளைத் தளபதி கமாண்டர் கிறகோல்வ் ஜேர்மைன், இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவர் கிறிஸ்டைன் ரொசோன் சகிதம் கிழக்குமாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகேவை சந்தித்து கலந்துரையாடினர்.

102 அடி நீமான "டுபே டிலோம்' கப்பலில் 11 அதிகாரிகள் உட்பட 102 கடற்படை வீரர்கள் உள்ளனர்.

# தலைமன்னாரில் பத்து இந்திய மீனவர்கள் கைது

தலைமன்னார் வடகடல் பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் நேற்று முன்தினம் (02) இவர்களை கைது செய்ததுடன் இரண்டு ரோலர் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை இவர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மேலதிக விசாரணைகளுக்கென தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சந்தேகநபர்கள் மீது நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு சிறிய தந்தையார் கைது

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பளை - நாகராமர் கோவில் பகுதியில் 14 வயது சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி தனது சிறிய தந்தையால், அதாவது தாயின் இரண்டாவது கணவரால் இவ்வாறு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

# காற்றினால் வீடுகள் சேதம்

திடீரென வீசிய சுழல் காற்றால் நுவரெலியா மாவட்டத்தில் 8 வீடுகள் பகுதிஅள விலும் ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்து ள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் 16 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

பம்பலபிட்டியில் மூன்று வீடுகளும், குருநாகலை - பொல்பித்திகம பகுதியில் 15 வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

# 24 மணித்தியால அடையாள வேலை நிறுத்த போராட்டம்

### மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணி

24 மணித்தியால அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

மேற்கொள்ளப்படும் இந்த வேலை நிறுத்தம் நேற்று (03.07) நள்ளிரவு தொடக்கம் என மேற்படி முன்னணி அறிவித்திருந்தது. சம்பள பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியின் செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்த காலத்தில் நாட்டின் பல பகுதிகளுக்கும் மின்சாரம் தடைப்பட வாய்ப்புள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யார் எந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டாலும் 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரம் வழங்கப்படும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் தங்களுடன் இணங்கியுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

### சட்டவிரோத விசாக்களுடன்

# இந்திய பிரஜை விமான நிலையத்தில் கைது

சட்டவிரோத விசாக்கள் மற்றும் கடவுச்சீட்டுக்களை தன்வசம் வைத்திருந்த தமிழ்நாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (02) இரவு 7.30 மணியளவில் குறித்த சந்தேகநபர் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து இத்தாலி விசாக்கள் 16, அவுஸ்திரேலிய விசா 1 மற்றும் மூன்று இந்திய கடவுச்சீட்டுக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்கென கட்டுநாயக்க விமான நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் செந்தமான விமானத்தில் குறித்த நபர் இலங்கை வந்துள்ளார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 114 பட்டதாரிகளுக்கு நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் 114 பட்டதாரிகள் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டது.

330 பட்டதாரிகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் 114 பட்டதாரிகளே காணப்பட்டுள்ளனர். இவர்கள் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளிலும் ஆறு மாதங்களுக்கு பயிலுநர்களாகவும் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார் எம்.பி, மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சீர்ணிவாசன் உள்ளிட்டோர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும் தலைமறைவாக இருந்த 122 பேர் கைது

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 122பேர் வட மாகாணத்தில் கைது செய்யப்பட்டனர். சுமார் பத்து நாட்களுக்குள் இவர்கள் கைதிகினர்.

பல்வேறு குற்றச் செயல்கள் காரணமாக நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும், கைதாகாமல் தலைமறைவாகத் திரிந்த 2814 பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் முப்பதாம் திகதி வரையான பத்து நாட்களுக்குள் இவர்கள் கைது செய்யப்பட்டனர். தென் மாகாணத்தில் 550 பேரும், மத்திய மாகாணத்திலிருந்து 573 பேரும், வடமேல் மாகாணத்திலிருந்து 466 பேரும் கைது செய்யப்பட்டனரென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. கிழக்கு மாகாணத்தில் 375பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 317 பேரும் கைது செய்யப்பட்டனர். வட மத்திய மாகாணத்திலிருந்து 215 பேரும், ஊவா மாகாணத்தில் 196 பேரும் கைது செய்யப்பட்டனர்.







ஆடி நிலா ஓடி வா என்ற தலைப்பில் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு கல்வி வலயம் ஏற்பாடு செய்திருந்த நிறை நிலாக் கலைவிழா வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் அக்குவைனஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ் சத்தியசீலன் வட மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் மு.ராதாகிருஸ்ணன் வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்டன் சோமராஜா ஆகியோர் உரையாற்றினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# கள்ளக் காதலைக் காட்டிக் கொடுத்த தொலைபேசி



கள்ளக் காதலைக் காட்டிக் கொடுத்தது தொலைபேசி

சந்தரே பிலியந்தலைப் பிரதேசத்தில் ஒரு வியாபாரியாவான். அவருக்கு வாகனம் ஒன்று வாங்கவேண்டும் என்பது நீண்டநாள் கனவு. ஒருநாள் வாகனமொன்று வாங்குவதற்காக பணத்துடன் சந்தரே புறப்பட்டுச் சென்றான். இவன் போய்க் கொண்டிருக்கும் போது இவரின் தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்தது.

"ஹலோ நீங்கள் எங்கே எப்படி இருக்கிறீங்கள், வாகனம் வாங்குவதற்கு கையில் பணம் இருப்பதால் கவனமாக போங்கோ ஆனால் நாம் கேட்கும் நேரத்திற்கு இல்லை யென்று சொல்லாமல் கேட்கின்ற பணம் தரவேண்டும் சரியா"

நான் வாகனம் வாங்கப் போகின்ற சங்கதி தனக்கும் மனைவிக்கும் மட்டும்தான் தெரியும். இது வெளியில் உள்ள நபருக்கு தெரிந்தது எவ்வாறு? அவருக்கு இது புதிராக இருந்தது. வாகனம் கொள்வனவு செய்யப்புறப்பட்ட சந்தரே இடைநடுவில் திரும்பி வந்து பணத்தை வங்கியில் வைப்புச் செய்துவிட்டு வீட்டுக்குப் போனான்.

"ஏன் வாகனம் சரியில்லையா" வீட்டிற்கு வந்த கணவரிடம் மனைவி கேட்டாள்.

நாங்கள் வாகனம் வாங்கப் போன விடயம் யாருக்கோ தெரிந்திருக்கிறது. வாகனம் வாங்க காசு இருக்கிறது என்றால் நாம் கேட்கின்ற நேரம் பணம் தரவேண்டும் என்று யாரோ ஒருவர் கோல் பண்ணிச் சொன்னார். இடைநடுவில் காசினைப் பறித்தாலும் என்ற பயத்தில் காசை வங்கியில் போட்டுவிட்டு வந்துவிட்டேன் என்றார் சந்தரே.

இது இன்னும் ஒருவருக்கு தெரிந்தது எப்படி? வாகனம் வாங்கப் போகும் விடயம் எங்கள் இருவருக்கும் மட்டும்தானே தெரியும்" ஆச்சரியத்துடன் மனைவி கேட்டாள். நாங்கள் இரவு கதைக்கும் போது யாராவது கேட்டுக்கொண்டிருந்தார்களா" சந்தரே மனைவியிடம் கேட்டான்.

மறுநாள் சந்தரே வழமைபோலத் தனது வியாபார நிலையத்திற்கு போனான். அவன் முதல்நாள் நடந்ததை மறந்திருந்தான்.

"நேற்றுப்போய் ஏன் வாகனம் வாங்கவில்லை. ஏன் பயந்து விட்டீர்களா? பயப்பட வேண்டாம். வங்கியில் போட்ட பணத்தை எடுக்க வேண்டாம். அதனை நாம் கேட்கும்போது தரவேண்டும்" என்று சந்தரேயின் தொலைபேசிக்கு மீண்டும் அழைப்பு வந்தது.

தொலைபேசியில் கேட்கும் குரல் முதல்தான் கதைத்தவரின் குரல்தானென சந்தரே புரிந்து கொண்டான் இதனால் சந்தரே சற்றுக் கலவரமடைந்தான். ஆச்சரியம் ஏற்பட்டது.

மாலை வீட்டிற்குச் சென்ற அவன் காலையில் நடந்த தொலைபேசி உரையாடல் பற்றி மனைவிக்கு கூறினான் அதனைக் கேட்டு மனைவி "இதென்ன பிரச்சினை, யாராக இருக்கும்? இத்துடன் மனைவி நிறுத்திக் கொண்டாள்.

இவ்வாறு தினமும் தொலைபேசி அழைப்பு வரக் தொடங்கியது. ஏதாவது ஒரு வேலை ஆலம்பிக்கும் போது அது பற்றி இனந்தெரியாத நபர் கேட்டுக்கொள்வான். சந்தரேக்கு இது பெரும் குழப்பமாக இருந்தது. தனது விபரம் பற்றி அழைப்பு விடுபவன் எவ்வாறு தெரிந்து கொள்கின்றான் என்பது அவனுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது.

சிலநேரம் இதுபற்றி யோசிக்கும்போது இதுபேய் பிசாசுகளின் வேலையாய் இருக்குமோ - என்று தோணுது. எதற்கும் நாம் சாஸ்த்திரியொருவரை கேட்டுப் பார்ப்போமா?" அவன் மனைவியிடம் கேட்டான். "எனக்கும் பயமாகத்தான் இருக்குது" மனைவியும் கூறினாள்.

மறுநாள் சந்தரே தனது வியாபார நிலையத்திற்குச் சென்ற சில நிமிடங்களில் அழைப்பு வந்தது என்ன பயந்திட்டீங்களா சாஸ்திரக்காரர்களிடம் கேட்கப்போவதாக சொன்னீங்கள். நல்ல இடத்தில் கேட்டுக்கொள்ளுங்கள். உங்களுடைய பலன் இப்ப நல்லதாக இல்லை. கெட்ட கிரகமும் இருக்கக் கூடும்" அதே நபரின் அழைப்பு.

மலை வீட்டுக்கு வந்தவன் அத் தொலைபேசி அழைப்பு பற்றி மனைவியிடம் கூறினான். "நாம் இது பற்றி பொலிஸில முறைப்பாடு செய்வோம்" கணவன் கூறினான்.

"இப்பவே பொலிஸுக்கு போகத்தேவையில்லை. நாம் இன்னும் கொஞ்சம் பார்ப்போம்" மனைவி கூறினாள். மறுநாள் தனது வியாபார நிலையத்தில் இருந்த சந்தரேக்கு வழமைபோல் தொலைபேசி அழைப்பு வந்தது.

"பொலிஸுக்கு போனால் பறவாயில்லை எங்களுக்கு பயமில்லை இப்ப நாமும் பொறுமையாக இருந்தது போதும் அடுத்த கிழமை நான் சொல்லும் இடத்திற்கு 15 இலட்சம் கொண்டு வந்து வைக்க வேண்டும் விஷயம் சரி வராவிட்டால் உன் மனைவியை தூக்குவோம்.

அந்த தொலைபேசி அழைப்புடன் அவர் இடிந்து போனார் வியாபார நிலையத்தை பூட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீட்டை நோக்கிப்போனார். அவரின் முழு உடலும் வியர்வையால் நனைத்திருந்தது. நடுங்கியபடி இருந்தவரை பார்க்க மனைவிக்கு பாவமாக இருந்தது.

"நீங்கள் ஏன் நடுங்கிறீங்கள்" மனைவி கேட்டாள் சந்தரே தொலைபேசி அழைப்புப் பற்றி பயந்தபடி மனைவிக்கு கூறினார். பயமுறுத்திய அழைப்பினால் மனைவிக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயந்தார்.

"எனக்கு பயம் உங்களுக்கு ஏதாவது கரைச்சல் தருவார்களோ என்று. அப்படி ஒன்று நடந்தால் நான் உயிருடன் இருந்து பிரயோசனமில்லை. இன்னும் பார்த்திருக்க முடியாது நாம் பொலிஸுக்கு போய் முறைப்பாடு செய்வோம்."

இவ்வாறு கூறிய சந்தரே பிலியந்தரை பொலிஸ் நிலையம் சென்று நிலையப் பொறுப்பாளர் திரு.சோமரத்ன விஜமுனியை சந்தித்து தாம் முகம் கொடுத்துள்ள பிரச்சினை பற்றி விபரித்தார். அவரின் அறிவுறுத்தலின் பிரகாரம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி திருநந்தசிறி (பேயொயளகைவ) அழைத்து முறைப்பாடு பற்றி விபரித்து சந்தரேயை பயமுறுத்துகின்ற பிசாசை தேடிப்பிடிப்பதற்கு ஆராய வேண்டிய விதம் பற்றி அறிவுறித்தினார்.

இப்ப நீங்கள் போங்கோ இந்தப் பிசாசை கைதுசெய்துவிட்டு உங்களுக்கு அறிவிக்கின்றோம். பொலிஸார் சந்தரேயை அனுப்பிவைத்தார்.

குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி இதனை புலனாய்வு நடாத்துவதற்கான சாஜன் திரு நீல் பிரியந்த என்பவரை நியமித்தார். இவர் இவ்வாறான புலனாய்வில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்.

தனது தலைமை அதிகாரியின் அறிவுறுத்தலின்படி சாஜன் நீல் சந்தரேக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்ட சிம்காட் பற்றிய விபரத்தினை குறித்த சிம்காட் பற்றிய விபரத்தினையும் அதிலிருந்து பெறப்பட்ட அழைப்பு பற்றிய விபரங்களுக்கு குறித்த தொலைபேசி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்டான்.

பின்னர் குறித்த சிம்காட்டிற்குரிய நபர் பற்றி ஆராயத் தொடங்கினார். அதன்போது அவன் கொட்டாவ பகுதியில் வசிப்பவன் என்றும் அடையாளம் கண்டுகொண்டார். சில நாட்களிலேயே வழியில் காத்திருந்து சந்தேக நபரை மடக்கிப் பிடித்துக் கொண்டார்.

சந்தேகநபரை பொலிசுக்கு கொண்டு வந்ததும் சந்தரேயை பொலிஸ் நிலையம் வரும்படி செய்தி அனுப்பினார்கள்.

"எமக்கு கோல் தந்து தொந்தரவு செய்தவனை பொலிஸார் பிடித்து விட்டார்களாம். எங்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு வரட்டாம்" கணவர் மனைவியிடம் கூறினார். "ஐயோ எனக்கு இந்த பொலிஸ் நிலையங்களுக் கெல்லாம் வரமுடியாது, மனைவி கூறினாள்.

அப்படி ஏலாது இரண்டு பேரும் ஒன்றாகத்தான் பொலிஸ் நிலையம் போக வேணும் என்று கூறிய கணவன், மனைவியையும் அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையம் போனான். "இதோ நிற்கின்றான் உங்களைப் பயமுறுத்திய பசாசு" பொலிஸ் நிலையத்திற்கு சென்ற இருவரையும் பார்த்து பொறுப்பதிகாரி சோமாரத்ன கூறினார். அவர் பார்த்ததும் மனைவி யின் முகம் மாறியது மிகவும் பந்தாவாகக் காணப்பட்டாள். ஆனால் சந்தரேக்கு அவனைக் கண்டதும் ஆத்திரம் பொங்கியது. "இவன் என்னிடம் வேலை பார்த்த ஒருவன்" ஆ அப்படியா"

"நான் உண்மையை சொல்கிறேன் சேர்" பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் சந்தேகநபர் சொல்லப்போவது என்ன? என்று எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவன் சந்தரேயின. மனைவியை நோக்கி கையை நீட்டி இவ்வாறு சொன்னாள்.

சேர் இவ தான் எனக்கு எல்லா விவரங்களும் தந்தவ. நான் பகல் நேரத்தில் இவவிடம் கோல்பண்ணிக் கேட்டுவிட்டு பின் சந்தரேயிடம் கேட்பேன். எங்கள் இருவருக்கிடையே தொடர்பு உள்ளது. இரண்டு கிழமைக்கு ஒரு தடவை நாம் கோட்டையில் சந்திப்போம். இவர் மகனுடன் வந்து மகனை "இன்டர்நெற் கபே" இல் விட்டுவிடுவார். அதன் பின் இரு மணித்தியால மட்டில் நாம் ஹோட்டலில் இருப்போம். சும்மாதான் நான் கப்பம் கேட்பன் என்று நீண்ட விபரத்தை கூறினான் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சந்தரேயின் மனைவி கொஞ்சங் காலமாக இவருடன் கள்ளக் காதல் கொண்டிருந்தார்.

சந்தேகநபர் தங்கள் தொடர்பு சம்பந்தமாக விபரங்கள் அனைத்தும் கணவனுக்கு முன்னால் கூறும்போது மனைவி தொடர்ச்சியாக அழுதவண்ணம் இருந்தாள். சந்தரேக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. கேடுகெட்ட வேலை பார்த்துவிட்டு அழுது நடிக்கிறாயா சந்தரே பல தடவை மனைவியை தாக்க முற்பட்டும் பொலிஸார் தடுத்தார்கள்.

"எமக்கு திருமணம் செய்த பெண் பிள்ளை இருக்கிறாள் தானே இந்த மாதிரியான வேலைகள் செய்ய முன் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வயது வந்தும் (வயசாகியும்) உங்களுக்கு உங்களை கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த மாதிரியான கேடுகெட்ட வேலைகளைத் தான் அப்பாவி ஆண்கள் கொலைகாரன் ஆகுவது அதன்பின் ஒருவர் இரண்டுபேர் இறப்பதில் தான் முடியும். இனி அழுது பலன் இல்லை. பிள்ளைகள் இருக்கும் தாய் என்ற படியால் பொறுப்புடன் வேலைசெய்ய பழகிக்கொள்ள வேண்டும்." நிலையப் பொறுப்பதிகாரி சந்ரேயின் மனைவிக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அவ இடைவிடாது அழுத வண்ணம் இருந்தார்.

இப்ப நீங்கள் வீட்டை போகலாம். வீட்டை போய் சண்டை பிடிக்க வேண்டாம். அதனால் வேறு பிரச்சினைகள் ஏற்படும். இந்தப் பெண் வேண்டாம் என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள் பொறுப்பதிகாரி சந்தரேக்கு கூறினார்.

சேர், உந்த மாதிரி கெட்ட பெண் எனக்கு தேவையில்லை. 20 வருடம் குடும்பம் நடத்திய எனக்கு இவள் யார்? எப்படிப்பட்டவள் என்று புரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. பரவாயில்லை நான் என் மனதை தேற்றிக் கொள்கிறேன். அடுத்த கிழமை நான் இவளை விவாகரத்து செய்யப்போகிறேன்" என்று பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறினான். பின்னால் மனைவி அழுதபடி போனாள்.

# ஈராக் நாகரிகம் அன்பினால் நிரப்பப்பட்டிருந்தது!



மத்திய கிழக்கின் பெண்கள் கற்கைநெறி விமர்சனச் சஞ்சிகையில் 2004ம் ஆண்டில் வெளியாகிய ஒரு நேர்காணலின் தமிழாக்கம். பேசுபவர்கள்: ஈராக் நாட்டைச் சேர்ந்த பெண்கள்.

அமல் அல்-கெடெய்ரி, "ஈராக் மன்று என்றழைக்கப்படும் பாக்தாத்தில் அமைந்த ஒரு கலை, கலாச்சார மையத்தின் நிர்வாகியும் நிறுவனருமாவார். அல்-முப்தி சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு அறியப்பட்ட பத்திரிகையாளர்.

**கேள்வி:** நீங்கள் ஏன் அமெரிக்காவிற்கு இப்படி ஒரு பயணத்தை மேற்கொண்டீர்கள்? உங்களுடைய நோக்கம் என்ன? இந்தப் பயணத்தினால் நீங்கள் எதை அடையலாம் என்று நினைக்கின்றீர்கள்? இவைகள் பற்றி எங்களுக்கு விளக்கிக் கூறமுடியுமா?

**அல்-கெடெய்ரி:** நாங்கள் ஈராக்கியப் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அல்ல. நாங்கள் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பைப் பார்த்த சாட்சியங்களான பெண்கள். நாங்கள் எங்கள் பக்கத்துக் கதையைச் சொல்வதற்காக இங்கு வந்திருக்கிறோம். ஈராக் நாடு கலிபோர்னியா மாநிலத்தைவிட அளவில் சிறியது. சதாம் ஹுசைனைத் தேடுதல், பேரழிவு ஆயுதங்களைத் தேடி அழித்தல் என்னும் போர்வையின் கீழ் இத்தனை அழிப்புகளும் நடந்தேறின.

ஈராக்கிலும் ஈராக்கை விட்டு வெளியேறி புகலிடத்திலும் இருக்கும் அரசுக்கு எதிரான சக்திகள் அமெரிக்க நிர்வாகத்திற்குக் கொடுத்த பொய்யான தகவல்களின் அடிப்படையிலான ததாவேஜுக்கள் காரணமாகத்தான் எங்களை அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செய்தது. ஈராக்கியர்கள் ஒவ்வொரு நாளும் கொல்லப்படுகிறார்கள். இப்போது 13 வருடங்களாக, 26 மில்லியன் ஈராக்கியர்களும் மேற்கத்தைய ஊடகங்களினால் மிகவும் அசிங்கமான ஒரு விதத்தில் ஏதோ நாங்கள் மனிதப் பிறவிகளே அல்லாதது போன்று சித்தரிக்கப்படுகிறார்கள்.

**கேள்வி:** ஈராக் கலாச்சார ரீதியாகச் செழுமை வாய்ந்தது என்பது எங்களுக்குத் தெரியும். ஈராக்கின் கலாச்சாரம் அதன் கலைகள் பற்றி நீங்கள் எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

**அல் முப்தி:** (கண்ணீர் வழிகின்றது) அது ஈராக்கினது சரித்திரம் மட்டுமல்ல. இது உலகத்தினது சரித்திரமும்தான். அந்தப் புராதன ஈராக்கியச் சிலைகளை நீங்கள் இனி எப்போதும் கண்டுபிடிக்க முடியாது. அந்த நூதன சாலைகளில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட சிலைகள் எல்லாமே பெரும்பாலாலும், ஆண்-பெண் இவர்களுக்கிடையில் ஒரு குழந்தை அல்லது குழந்தைகள். இப்படித்தான் இருக்கும். அவற்றில் 20 ஆயிரம் வருடங்கள் பழமையானவையும் உண்டு. ஈராக் நாகரிகம் அன்பினால் நிரப்பப்பட்டிருந்தது என்பதனை இது நிரூபிக்கின்றது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளிற்கும் மேற்பட்ட அசலான கலைப் பொருட்கள் யாவும் களவாடப்பட்டுவிட்டன. அசல்கள் மட்டும் களவாடப்பட்டு, நகல்கள் அப்படியே விடப்பட்டுள்ளன. எல்லாமே அமெரிக்க இராணுவம் காவலில் இருந்தபோது நடந்தவைதான். கடைசி நூறு வருடங்களிற்கான முக்கியமான ஆவணங்கள் காணாமற் போய்விட்டன. கொள்ளையர்கள் பல்கலைக்கழக நூலகத்திற்கும், பொதுநூலகத்திற்கும் தீயிட்டுக் கொளுத்தினார்கள். இரண்டரை மில்லியன் நூல்கள் தொலைந்து போயின. அப்பாசிட் காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'Qhdkid' என்றழைக்கப்பட்ட மாளிகை முற்றாகக் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூல்கள் ஒரு டொலருக்கு 10 நூல்கள் வீதம் தெருவோரங்களில் விற்கப்பட்டதை எனது கண்களால் பார்த்தேன்.

**கேள்வி:** அமெரிக்க இராணுவம் ஈராக்கை முற்றுகையிட்டபோது எழுந்த கலவரங்களின்போதுதான் ஈராக் கலை கலாசார மையம் கொள்ளையடிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டது என்று பரவலாக செய்தி ஊடகங்கள் தெரிவித்தன. இது ஏன் நடந்ததென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இது அமெரிக்கப் படைகளினால் தடைசெய்யப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகிறீர்களா?

**அல்-கெடெய்ரி:** இது ஒரு கலாசாரத்தையும் அதனோடிணைந்த வாழ்வின் சகல அம்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான வழிமுறை. அங்கு பல பெண்கள் வேலை செய்தார்கள். அவர்கள் இந்தக் கலாச்சார மையம் அழிக்கப்பட்டதனால் மிகவும் மனமுடைந்து போய் இருக்கிறார்கள்.

எங்கள் கலாச்சார மையத்தின் இடிந்து போய்க்கிடந்த சிதறல்களுக்குள் நாங்கள் கிளறித் தேடினோம். அங்கு கைவினைத் தறிகள் உடைக்கப்பட்டுக் கிடந்தன. அவர்கள் ஏன் அவற்றை உடைத்தார்கள்? அவர்கள் தறிகளைத் திருடி இருந்தால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியும். நூதனசாலை. இது ஒரு வெட்ட வெளிச்சமான உதாரணம். சர்வதேச ரீதியில் நிகழும் கிரமமான நடைமுறை. இந்த மாதிரியான நடவடிக்கைகளின்போது கொள்ளையர்கள் அசல்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஏன் நகல்களை விட்டுச் சென்றார்கள்? இது கொள்ளையர்களுக்கு எப்படித் தெரியும்? ஏன் கொள்ளையடிக்கும்போது இராணுவம் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தது?

**கேள்வி:** இந்த யுத்தகாலச் சூழலில், பொதுவாக ஈராக்கிய மக்களின், குறிப்பாகப் பெண்களின் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை விபரிக்க முடியுமா? முதலில் ஈரான்-ஈராக் யுத்தம், பிறகு வளைகுடா யுத்தம், சர்வதேச தடைச் சட்டங்கள், இப்போது அமெரிக்க இராணுவத்தின் ஆக்கிரமிப்பு...

**அல் முப்தி:** ஒரு ஈராக்கியப் பெண்ணாக, என்னுடைய வாழ்க்கையில் இது என்ன விதமான தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதை நான் சொல்கிறேன். ஈரான்-ஈராக் யுத்தம் ஆரம்பித்தபோது எனக்கு 20 வயதுதான் ஆகி இருந்தது. அந்த வயதில் நான் ஒரு மகனைப் பெற்றெடுத்தேன். எனவே அவன் அந்த யுத்த காலத்தில் ஒரு குழந்தையாக இருந்தான். 1994ம் ஆண்டு யுத்தத்தின்போது அவன் சிறுவனாக ஆனான். பாரதூரமான தடைச் சட்டங்களின் காலத்தில் அவன் பால்யப் பருவத்தில் இருந்தான். அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பின்போது ஒரு இளம் ஆணாக இருக்கின்றான். கடவுளுக்கு நன்றி சொல்லவேண்டும். எனக்கு நிதியுதவி செய்வதற்கு எனக்கு ஒரு நல்ல தாயார் இருக்கிறாள். அவர் நான் எனது மகனை வளர்ப்பதற்கு உதவினார். நான் ஒரு பத்திரிகையாளராக வருவதற்கான சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கினார். ஆனால் மற்றைய பெண்களுக்கு இப்படியான சந்தர்ப்பங்கள், தேர்வுகள் இல்லை. 1979இல் ஈராக் யுனெஸ்கோ விருது பெற்றது. ஏனெனில் அப்போது அங்கு கல்விபெற்ற ஆண்களும் பெண்களும் நிறைய இருந்தார்கள். யுத்தங்களும் தொடர்ந்த தடைச் சட்டங்களிற்கும் பின் 15 வயதிற்குட்பட்ட இளம் சந்ததியில் 45 வீதமானவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இப்போது இருக்கின்றார்கள். ஈராக்கில் மிகச் சிறந்த கல்விமுறைகள், இலவச மருத்துவ முறைகள், மிகச் சிறந்த சமூக சேவைகள் என்பன இருந்தன. இப்போது எங்களுக்கு ஒன்றுமே இல்லை.

என்ன இருந்தாலும், நாங்கள் இழந்ததில் மிகவும் முக்கியமானது எங்களுடைய விழுமிய அளவுகோல். எங்களுடைய விழுமியங்கள் இப்போது தலைகீழாக உள்ளன. 20 வருடங்களிற்குள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அதிக அபிவிருத்தியடைந்த நாடுகளின் பட்டியலில் 14ம் இடத்தில் இருந்த ஈராக் இன்று 156ம் இடத்திற்குச் சென்றுள்ளது. 7 மில்லியன் ஈராக்கியர்கள் இன்று வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளனர். யுத்த காலத்திலும் தடைச்சட்ட காலத்திலும் கணவன்களையும் மகன்களையும் இழந்த தனியான பெண்கள் 3 மில்லியன்கள் இருக்கிறார்கள்.

இந்தப் பாதிப்புகளினால் பாலியல் தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. 1991ம் ஆண்டுக்கு முன்பு எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகக் குறைவாக இருந்தது. கடைசி 10 வருடங்களாக,

பாலியல் தொழில் செய்பவர்களின் வீதம் ரொக்கெட் வேகத்தில் அதிகரித்துள்ளது. அதிகமான பெண்களும் சிறுவர்களும் தங்களது வாழ்க்கையை ஓட்டுவதற்காக பாலியல் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். நான் வேலைத்திட்டம் ஒன்றிற்காக 10-12 வயதான சிறுவர்களுடன் வேலை செய்தேன். அவர்கள் இன்னும் பாலியப் பருவத்தைக்கூட எட்டாதவர்கள் இவர்கள் பாலியல் தொழிலுக்குள் சிக்கி இருக்கின்றார்கள்.

**கேள்வி:** மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையொன்றில் அமெரிக்க ஆக்கிரமிப்பு நிர்வாகமும் ஈராக் நிர்வாகமும் பொதுமக்களிற்கான பாதுகாப்பினை வழங்கத் தவறியமையினால் இ பாலியல் பலாத்காரங்களும் இ பெண்களும் சிறுமிகளும் கடத்தப்படுவதும் அதிகரித்துள்ளன என்று கூறுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்தைக் கூறமுடியுமா?

**அல் முப்தி:** பெண்கள்மீதான பலாத்காரம் தொடர்பான நிறையச் சம்பவங்களை நான் அண்மையில் பார்த்திருக்கிறேன். இவற்றுள் மிக முக்கியமாக எனக்குள் உறுத்தி நிற்பது பின்வரும் சம்பவமாகும். ஒன்பது வயதான சிறுமி ஒருத்தி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு 10 நாட்களாக இரத்தம் வழிந்தோடிக் கொண்டே இருந்தது. அவளுடைய உடல் ஊமைக் காயங்களால் புதைந்திருந்தது. அந்தக் காட்சி ஒருவர் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாதது.

நான் என்ன நடந்ததென்று அவளிடம் கேட்டபொழுது அதனை விளக்கமாகச் சொல்லக்கூட அந்தப் பாலகிக்குத் தெரிந்திருக்கவில்லை.

**கேள்வி:** பெண்களுக்கான ஐ.நா. அபிவிருத்தி நிதியத்தின் நிறைவேற்று நிர்வாகி நொயலின் ஹீசர்இ அங்குள்ள பாதுகாப்பற்ற சூழலானது பெண்கள் புனரமைப்பு வேலைகளிற்கான பொறுப்புகளை எடுப்பதற்குத் தடையாக உள்ளது என்று சொன்னார். இது குறித்த உங்கள் அபிப்பிராயங்கள் என்ன? யுத்தத்திற்குப் பின்பான சமூகத்தில் என்ன விதமான பாத்திரங்களைப் பெண்கள் எடுக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**அல் கெடெய்ரி:** ஓம். இது ஒரு முக்கியமான பிரச்சினை. அதிகரித்துவரும் கடத்தல்கள், பாலியல் பலாத்காரங்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதிரான ஏனைய குற்றச் செயல்கள் போன்றவற்றினால் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக பெண்கள் இருக்கிறார்கள். பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாவோம் என்ற பயமின்றி வீட்டைவிட்டு வெளியேற முடியாதிருக்கும் இப் பெண்கள் எப்படி ஒரு நாட்டைப் புனரமைக்கும் பணியில் பங்கு கொள்ள முடியும். இன்றைய ஆக்கிரமிப்பு இவைகள் எல்லாவற்றிற்கும் முன்பு பெண்கள் சமூகத்தில் மிக முக்கியமான பங்கினை வகித்திருக்கின்றார்கள்.

**கேள்வி:** ஈராக்கின்மீதான அமெரிக்கத் தலைமையிலான ஆக்கிரமிப்பு தீவிரவாதக் குழுக்களை வளர்ப்பதற்கு உந்துதலாக இருக்கின்றது என்று கூறும் எண்ணற்ற அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இவற்றினால் பெண்கள் முகத்திரை அணியும்படி மிரட்டி நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இது குறித்து ஏதாவது கருத்து?

**அல் முப்தி:** யுத்தத்திற்கு முன்பு சில மதத் தீவிரவாதிகள் தெருவில் ஹிஜாப் அணியாத பெண்களுக்கு எதிராகப் பேசினார்கள். அப்படி இருந்தும், 'ரியா சட்டமன்றம் பெண்களுக்குச் சாதகமான ஒரு அற்புதமான ஆணையைக் கொண்டு வந்தது. எந்த ஒரு பெண்ணையும் ஹிஜாப் அணியும்படி வற்புறுத்துவதற்கு யாருக்கும் உரிமையில்லை என்று ஆணை பிறப்பிருந்தது.

ஈராக்கில் மிக அரிதாகவே பெண்கள் முக்காடு அணிகிறார்கள். எனினும் இது பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றது. எப்படி இருப்பினும் இப்பொழுது நாட்டிலுள்ள குழப்பமான நிலைமையினால் பலாத்காரம், பாலியல் நிர்ப்பந்திப்பு, பாலியல் பலாத்காரம் என்பன அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. பலாத்காரங்களிற்குப் பயந்து குறைவான பெண்களே தெருவில் நடமாடுகின்றார்கள். இது அமெரிக்க ஆக்கிரமிப்புடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறதா என்று என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் ஒரு வேளை அந்நிய பிரசன்னம் அதனோடிணைந்து வரும் கடத்தல்கள், பாலியல் பலாத்காரம், என்பன அதிகரித்திருப்பதனால் எங்கள் பெண்களுக்கான பாதுகாப்பிற்கான தேவை அதிகரித்துள்ளது.

**கேள்வி:** ஈராக் நாட்டைப் புனரமைப்பதில் புகலிட ஈராக்கியர்கள் என்ன பங்கினை வகிக்க முடியும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

**அல் முப்தி:** ஈராக்கினை மீளக் கட்டுவதில் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு இருக்க வேண்டும். அது ஈராக்கியர்களுக்க மட்டுமல்ல. ஏனெனில் அங்கு நடந்த அழிவுக்கு அனைவரும் பொறுப்பு. சர்வதேச நிறுவனங்கள், அரசியல் தலைவர்கள் (தங்கள் நாடுகளில் தட்டிக் கழிக்க முடியாத சவால்களை எதிர்கொண்டு அவற்றுடன் புழங்கிய நெல்சன் மண்டேலா போன்றவர்கள்) முக்கிய குரலாக இருக்க முடியும். ஐக்கிய நாடுகளுக்கு என்ன நடந்தது? ஈராக் நிர்மூலமாக் கப்பட்டபோது ஐ.நா.சபை போன்ற நிறுவனங்கள் எங்கே இருந்தன? ■

நன்றி : இணையம்

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூலை மாதம் 04ஆம் திகதி புதன்கிழமை

# அகதிகளாக ஆட்களைக் கடத்துவதும் ஓர் இலாபமீட்டும் தொழில்

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு 24 மணித்தியாலங்களில் நான்கு அகதிப் படகுகள் சென்றடைந்திருப்பதாகச் சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவுஸ்திரேலியாவின் கொகோஸ் தீவுகள் மற்றும் ஆஷ்மோர் தீவுகளில் வந்திறங்கிய சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களும் கிறிஸ்மஸ் தீவுகளில் கொண்டுபோய் இறக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்துப் பெறுவதற்காக, சுமார் இருநூறுக்கு மேற்பட்டோர் இந்த நான்கு படகுகளிலும் சென்றுள்ளரெனத் தெரிய வருகிறது. இவ்வாறு சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கைத் தமிழர்களாவர். ஏற்கனவே இலட்சக் கணக்கான தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சம் கோரி பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜெர்மனி, நெதர்லாந்து போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் குடியேறியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் தஞ்சம் தேடிச் சென்றவர்கள் அல்லர். பொருளாதார வாய்ப்புகளைத் தேடியே கொந்தளிக்கும் அலை கடலையும் தாண்டிச் சென்றவர்கள். இவர்கள் பொருளாதார அகதிகள்தான்.

இந்த நாடு கடந்த ஆட்கடத்தல், திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுகிறது. ஒழுங்கமைக்கப்பட்ட சில குழுக்கள் இக் குற்றச் செயலைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்கின்றன. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தின்போது பல்வேறு நாடுகளில் இடம்பெற்ற யுத்த மற்றும் நெருக்கடிச் சூழலின் விளைவாக நாட்டை விட்டுத் தப்பிப் பாதுகாப்புத் தேடிச் செல்பவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கும் நடைமுறை காணப்பட்டது. அது இப்போது பெரும்பாலும் நாடு கடந்த குற்றச் செயலாகவே மாறிப் போயிருக்கிறது.

இந்த ஆட்கடத்தலின் முக்கிய மையமாக இலங்கை பயன்படுத்தப்படுகிறது. இலங்கை, இந்தியா, மலேசியா, தாய்லாந்து, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள கடத்தல் கும்பல்கள் ஒன்றிணைந்து திட்டமிட்டுச் செயற்படுகின்றன. இது பெருமளவுக்குப் பணத்தைப் புரள வைக்கும் தொழிலாக இப்போது மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆட்கடத்தலை ஒழுங்கமைக்கப்பட்ட, நாடு கடந்த குற்றச் செயலாகத்தான் ஐக்கிய நாடுகள் சபை வகைப்படுத்தியிருக்கிறது. தரை, கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக ஆட்களைக் கடத்துவதற்கு எதிரான ஒப்பந்த விதியொன்று 2004ஆம் ஆண்டு ஐ.நா.வினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த விதி கொண்டு வரப்பட்டு எட்டு வருடங்கள் கடந்து விட்டன. இருந்தாலும் இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் சம்பந்தப்பட்ட நாடுகள் அனைத்துமே நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன.

பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இந்த அகதிக் குடியேறிகளை எதிர்த்து மக்கள் இயக்கங்களை நடத்தத் தொடங்கிவிட்டனர். அகதிக் குடியேற்றங்களை எதிர்க்கும் அரசியல் கட்சிகளும் களத்துக்கு வரத் தொடங்கிவிட்டன.

ஆட்கடத்தல் என்பதன் அர்த்தம் என்ன? சர்வதேச எல்லைகளைத் தாண்டி உத்தியோகபூர்வ முறைக்குப் புறம்பாகச் சட்ட விரோதமாக இன்னொரு நாட்டுக்குள் ஆட்கள் கடத்தப்படுவதையே ஆட்கடத்தல் என்கிறார்கள். இவர்களிடம் தாம் சென்றடையப் போகும் நாடுகளுக்குள் செல்வதற்கு உரிய ஆவணங்களோ, முன் அனுமதியோ இருக்காது. செல்வம் கொழிக்கும் நாடுகளுக்குள் சென்று வேலை மற்றும் பொருளாதார வாய்ப்புகளைப் பெறுவதற்காகவே முறையற்ற விதத்தில் ஆட்கள் கடத்தப்படுகிறார்கள். அகதி அந்தஸ்து தேடிச் செல்பவர்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு முகவர்கள் மூலம் இவர்கள் கடத்தப்படுகிறார்கள். இந்த ஆட்கடத்தலுக்குப் பின்னணியில் இருக்கும் உண்மையான முகங்கள் வெளியே தெரியாது. மூடுதிரைகளுக்குப் பின்னால் இருக்கும் இந்த முதலைகளின் முகவர்களே சகலதையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கிறார்கள். பாதுகாப்பற்ற படகுகளில் ஆடு, மாடுகளைப் போல அப்பாவி மனிதர்கள் ஏற்றி இறக்கப்படுகிறார்கள்.

அகதிளென்ற போர்வையில் குடியேறிகள் செல்லும் நாடுகளிலுள்ள பொலிசாரும் தூங்குகிறார்கள். இன்டர்போல் எனப்படும் சர்வதேசப் பொலிஸ் பிரிவும் குறட்டை விட்டுத் தூங்குகிறது. இலங்கை மட்டும் என்னவாம்...?

சட்ட விரோதக் குடியேறிகள் பெரும்பாலும் சிறிய இயந்திரப் படகுகள், அல்லது மீன்பிடிப் படகுகளிலேயே கடத்திச் செல்லப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, பல நாட்களாகப் பல நெருக்கடிகளை எதிர்கொண்டே இவர்கள் செல்ல வேண்டியுள்ளது. பொதுவாகக் கடத்தல்காரர்கள் பயன்படுத்தும் படகுகள் பதிவு செய்யப்பட்டவையாக இருப்பதில்லை. அதில் எந்த நாட்டுக் கொடியும் பறப்பதில்லை. காணி, பூமி மற்றும் நகை-நட்டுகளை விற்றுவிட்டோ அல்ல ஈடுவைத்தே தான் முகவர்களுக்கு இவர்கள் பெரும்பாலும் பணம் கொடுகின்றார்கள். கடுமையான நடவடிக்கைகளை இலங்கை அரசு மட்டுமல்ல, இந்தப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட நாடுகளும் எடுக்க வேண்டும். கரையோரக் காவல் படையினரின் கண்களில் மண்ணையோ அல்லது காசையோ அள்ளி வீசி விட்டுத்தான் சட்டவிரோதமாக கரை சேருகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளும் உண்டு. சட்டத்தை மட்டம் தட்டுவோர்களைத் திட்டமிட்டுப் பிடிக்க வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# மாற்றவியலாத ஒரு விதியின் சந்திப்பு

ஒரு நள்ளிரவில் சுதந்திரம் பெற்ற நாடு இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு 1947 ஆகஸ்டு 14 நள்ளிரவு 12 மணிக்கு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை)

பல ஆண்டுகளுக்கு முன் மாற்றவியலாத விதியைச் சந்திப்பதாக நாங்கள் உறுதி கூறியிருந்தோம். அந்தச் உறிதிமொழியை நிறைவேற்றுவதற்கான வந்துவிட்டது. நள்ளிரவின் மணியடிக்கும் போது உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் விடுதலை பெற்று இந்தியா மட்டும் உயிர்த்தெழும். அந்த வேளை



வந்துவிட்டது வரலாற்றில் அரிதாக வரும் வேளை அது பழையதிலிருந்து புதியதிற்குள் அடியெடுத்து வைக்கும் வேளை அது. ஒரு யுகத்தின் முடிவில், நீண்ட நாள் அடக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தேசத்தின் ஆன்மா பேசத் துவங்கும் வேளை அது. இந்திய மக்களுக்காகவும், தேசத்தையும் விடப்பெரிதான மனிதகுல நன்மைக்காகவும் நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வதாக உறுதிமொழி எடுப்பதற்கு இந்த உன்னத வேளையைப் பயன்படுத்துவது பொருத்தமான செயலாகும்.

'வரலாற்றின் வடியலிலேயே இந்தியா தன் முடிவற்ற தேடலைத் துவங்கிவிட்டது. சுவடு தெரியாமல் மறைந்துவிட்ட பல நூற்றாண்டுகள் முழுவதும் அவளுடைய முயற்சிகளும் அவளின் பிரமாண்டமான வெற்றி தோல்விகளும் நிரம்பியுள்ளன. இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்தபோதிலும் தன்னுடைய தேடலையோ அல்லது தனக்கு பலம் தந்த லட்சியங்களையோ இந்தியா மறந்துவிடவில்லை. துரதிருஷ்டமான ஒரு காலம் இன்று முடிவுக்கு வந்துவிட்டது இந்தியா மீண்டும் தன்னையே அடையாளம் கண்டு கொண்டாள். இன்று நம் சாதனையின் கொண்டாட்டம் இனி வரப்போகும் இதைவிடச் சிறந்த சாதனைகளுக்கும் வெற்றிகளுக்குமான ஒரு படிக்கல்தான் ஒரு வாய்ப்பின் துவக்கம்தான். இந்த வாய்ப்பினைப் பற்றிக் கொண்டு, எதிர்காலத்தின் சவால்களை ஏற்றுக் கொள்ளும் உறுதிப்பாடும் சிந்தனைத் திறனும் நமக்கு இருக்கிறதா?

விடுதலையும் அதிகாரமும் வரும்போது பொறுப்புகளும் வருகிறது. இந்திய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அவையின் மீதுதான் அந்தப் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்த விடுதலையைப் பெற்றெடுப்பதற்காக நாம் எல்லாவித வேதனைகளையும் தாங்கியிருக்கின்றோம் அந்த வேதனை தந்த துக்கம் நம் இதயம் முழுவதும் நினைவுகளாக நிரம்பியிருக்கிறது. அந்த வேதனையில் கொஞ்சம் இன்று தொடர்கிறது. இருந்தாலும் இறந்தகாலம் முடிந்து விட்டது எதிர்காலம் நம்மை அழைக்கிறது.

அந்த எதிர்காலம் எளிதானதோ, ஓய்வுதருவதோ அல்ல. நாம் இதுவரை எடுத்த உறுதிமொழிகளையும் இன்று எடுக்கபோகும் உறுதிமொழியையும் நிறைவேற்றுவதற்காக அயர்ச்சி இல்லாமல் முயற்சிகளைத் தொடரவேண்டிய எதிர்காலம் அது. இந்தியாவுக்கு சேவை செய்வதென்பது துன்புற்றிருக்கும் லட்சக்கணக்கான இந்தியர்களுக்கு சேவை செய்வதாகும். வறுமையையும் அறியாமையையும் நோய் நொடிகளையும் வாழ்வதற்கான வாய்ப்புகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதாகும். ஒவ்வொரு கண்ணில் இருந்து சொட்டும் ஒவ்வொரு துளிகண்ணீரையும் துடைப்பதே நம் தலைமுறையில் தோன்றிய மாபெரும் மனிதர்களின் இலட்சியமாகும். இந்த லட்சியம் நம் சக்திக்கு அப்பாற்பட்டதாய் இருக்கலாம். ஆனால் கண்ணீர் இருக்கும் வரை, துன்பங்கள் இருக்கும்வரை நம் பணி ஓயாது.

எனவே நாம் உழைக்க வேண்டும் கடுமையாக உழைக்க வேண்டும் கனவை நனவாக்குவதற்காக உழைக்க வேண்டும். அவை இந்தியாவை பற்றிய கனவுகள் இந்த உலகத்தைப் பற்றிய கனவுகளும் கூட ஏனெனில், தனித்தனியாக வாழ்வது என்று கற்பனையில் கூட நினைக்கவியலாத அளவிற்கு தேசங்களும் மக்களும் இன்று பின்னிப் பிணையப்பட்டுள்ளனர். சமாதானம் என்பதை கூறுகளாகப் பார்க்க முடியாது. தொடர்பில்லாத துண்டுகளாக ஆக்க முடியாத் இந்த உலகத்தின் பேரழிவுகளையும் கூடப் பிரித்துப் பார்க்க முடியாது.

# கணக்கு கேட்டதால்தான் பழைய மாணவர் சங்கம் தன்னைத் துரத்த முனைகிறது என்கிறார் இந்த அதிபர்

## வேம்படி மகளிர் கல்லூரிச் சர்ச்சை தொடர்கிறது

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் அதிகார துஷ்பிரயோகத்தை தடுத்தமையினால்தான் தன்னைப் பாடசாலையிலிருந்து வெளியேற்றுவதற்கு பழைய மாணவிகள் சங்கம் திட்டமிட்டு செயற்பட்டதாக மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் ரஜனி முத்துக்குமார் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரஜனி முத்துக்குமார் கூறியதாவது.

யாழ்.வேம்படியில் தற்போது நடைபெறுகின்ற அதிபர் பதவி நிலை இழுபறிக்கு முக்கிய காரணம் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தினர் தான். இரண்டரை வருடங்களாக இந்தக் கல்லூரியில் அதிபராக இருக்கின்றேன்.

இந்தக் கல்லூரியில் 70 சதவீதமான மாணவிகள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றவர்கள். ஏனையவர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் வர்த்தகர்களின் பிள்ளைகள். ஏழை மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக கல்லூரிக்காக நன்கொடை வாங்குவது இல்லையென என நான் முடிவு செய்தேன்.

இந்த முடிவானது பழைய மாணவிகள் சங்கத்தினருக்கு பிடிக்கவில்லை. இத்தோடு முன்னைய காலங்களில் வாங்கப்பட்ட நன்கொடை தொடர்பில் எந்தவித கணக்கு அறிக்கையும் இதுவரை காட்டப்படவில்லை.

இத்தோடு பழைய மாணவர் சங்கத்தின் தலைவியாக பாடசாலை அதிபர் தான் இருக்க வேண்டும். ஆனால் இந்த சங்கத்தில் அப்படி இல்லை. அதிபர் இருக்கக் கூடாது எனவும், கணக்கு வழக்கு தம்மிடம் கேட்கக் கூடாது என அவர்கள் நினைக்கின்றார்கள்.

வெளிநாடுகளில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட 15 இலட்சத்திற்கு இதுவரை கணக்கு இல்லை. இதைத் தட்டிக் கேட்டதால் தான் என்னை மாற்றி விட்டு தாங்கள் விரும்புகிறவரைப் போடுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றனர்.

நான்கு வருடங்களுக்கு மேலாக பழைய மாணவர் சங்கத்தின் கணக்கறிக்கைகள் பாடசாலை அதிபரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. குறிப்பாக பழைய மாணவர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மணி விழா நிகழ்வு மற்றும் புதிய கணினிக் கூடம் அமைப்பு போன்ற செலவிற்கான அறிக்கைகள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்ட வேணுகா சண்முகரட்ணம் நேற்று தனது பதவியை

(10ஆம் பக்கம் பார்க்க)

# காஞ்சிவரம் திரைப்படம் ஒரு பார்வை

மலையாளத் திரைப்பட இயக்குனர் பிரியதர்ஸ . னின் வழமையான பாணியிலிருந்து தனித்து நிற்கும் படம் காஞ்சிவரம். பல வருடங்களாக இக்கதை தன் மனதில் இருந்ததாகவும் இதை இயக்கியது ஆத்மதிருப்தியைத் தந்தது எனவும் அவர் சொல்கிறார்.

தற்போதைய இந்தியாவில் நெசவாளிகள் தொழிலின்றித் தறிகளைத் தூசி பிடிக்க விட்டுக் கடன்பட்டுக் கஞ்சி குடிக்கிறார்கள். தீர்க்க முடியாத தொடர்கடன்களாலும் அரசின் அலட்சியத்தாலும் வேறு வழியற்றுக் குடும்பமாகத் தற்கொலை செய்யும் விவசாயிகள் போலவே குடும்பமாகத் தற் கொலையைத் தவிர வேறு முடிவு தெரியாது தடுமாறி நிற்கிறார்கள்.

காஞ்சிவரம் திரைப்படமும் ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலிருந்து காந்தியின் மரணத்தின் பின்னான நாட்களில் முடிகிறது. 1948லிருந்து படம் ஆரம்பித்து அசைபோடும் நினைவுகளோடு நகர்ந்து ஆரம்பத் தொடர்பினூடே கதை முடிகிறது. திருவின் ஒளிப்பதிவு முக்கிய கதாபாத்திரம் போலப் பெரும் பங்களிப்பைச் செய்கிறது. துணைப்பாத்திரங்களும் இயல்பான நடிப்பைத் திறம்படச் செய்கின்றனர்.

பிரதான பாத்திர மேற்ற பிரகாஸ்ராஜ் அப்பாத் திரத்தில் ஒட்டாமல் மிகை நடிப்பை வழங்கியதாகவே தோன்றுகிறது. அவரது உடல் மொழி பேச்சுத் தொனி மசாலா வாசனையை கொஞ்சம் வீசச் செய்கிறது. இங்கு கதாநாயகனென



அவரைக்குறிப்பிடவில்லை. வழமையான தமிழ்ச் சினிமாக் கதாநாயகர்கள் போல பத்து இருபது பேர்களை அடிக்கவில்லை. பத்துப் பேரிடம் அடிவாங்குகிறார். நீதி நேர்மையை எச்சந்தர்ப்பத்திலும் பேணாமல் திருடனாகவும் சுயநலக்காரனாகவும் இருக்கிறார். வழமையான சினிமாவில் கதாநாயகன் இறுதியில் குடும்பத்துடன் இணைந்து விடுவான். முடிவில் மனைவியும் மகளுமின்றித் தனித்து நிற்கிறார். சிறைக்குப் போன பின்னணிக்கதையில் அவனது வளமையான வாழ்வு சொல்லப்படும். இதில் வறுமையான வாழ்க்கை மட்டுமே பின்னணிக் கதை. சிறையிலிருந்து பெயிலில் அல்லது தப்பிவரும் கதாநாயகன் பழிவாங்குவான். காஞ்சிவரத்தில் தன் இயலாமையில் மகளைக் கொல்கிறார் வேங்கடம்.

ஸ்ரேயாரெட்டி அன்னம் பாத்திரத்தில் வேங்கடத்தின் மனைவியாக நடிக்கிறார்.

பட்டு என்றால் காஞ்சிபுரம் என்பர். கோயிலை அண்மித்த வீதிகளெங்கும் புட்டுசேலை விற்கும் கடைகள் காணப்படும். காஞ்சிவரத்தில் வாழ்ந்த பட்டு நெசவாளர்களின் வாழ்க்கையின் வறுமையும் அந்தக் காலகட்ட வாழ்வும் படத்தின் மைய இழையாகப் பின்னப்பட்டுள்ளது. ஒருபட்டு நெசவாளியின் வீட்டுப் பெண் பட்டுச்சேலை உடுத்த ஆசைப்படுவது நிறைவேறாத பேராசையாகிப் போகின்றது. வீடு கட்டுந் தொழிலாளி வீதியோரத்தில் படுப்பதும் போர்வை நெய்பவன் குளிருக்கப் போர்வையற்றிருப்பதும் விவசாயி வெறும் வயிறாய்க் கிடப்பதும் போல பல பட்டுச் சேலைகளை நெய்பவன் அதைக் கனவு காண்பது பேராசையாகி நிராசையாகிறது. தன் திருமணத்தில் மனைவிக்கு பட்டுடுத்தி அழைத்து வருவதும் பின்னர் மகளுக்காவது பட்டுடுத்திக் கல்யாணம் செய்ய விரும்புவதும் பல வருடங்களாக முயற்சித்தும் முடியாத காரியமாகின்றது.

நெசவாளர்களுக்கு நியாயமான கூலி வழங்காமல் கலைத்திறனுக்குச் சரியான பெறுமதி கொடுக்காமல் அதிகாரியும் வியாபாரிகளும் பெரும் இலாபம் சம்பாதிக்கின்றனர். அதிகாரியின் மகளுக்கு நெய்யும் சேலை பற்றி ஆர்வமுடன் வேங்கடம் பேசுகிறார். அன்னம் பார்க்க ஆசைப்பட்டும் அச்சேலையைப் பார்க்கமுடியவில்லை. அவர்களது பெண் குழந்தைக்கு பெயர் சூட்டுகையில் ஊரார் மத்தியில் அக்குழந்தைக்கு வாக்களிக்கிறார்.

அன்றாடம் அதைத் தொட்டு நெய்யும் ஒருவனின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணின் உடலில் உடுத்த முடியாத ஏக்கத்தின் யதார்த்தமது. மனைவிக்கும் தெரியாமல் மாட்டுத் தொழுவத்தில் இரவு நேரங்களில் இரகசியமாகக் கொஞ்சங் கொஞ்சமாக நெசவு செய்கிறார். மூன்று மாத வேலை நிறுத்தத்தால் பட்டினி கிடந்தாலும் நெசவாளிகள் உறுதியாக நிற்கின்றனர். இருபது வீத சம்பள உயர்வு போதாது மற்றைய கோரிக்கைகளும் நிறைவேற வேண்டுமென உறுதியாக நின்ற வேங்கடம் ஒரு சந்தர்ப்பத்தில் மாறிப் போக நேரிடுகிறது.

பதினாறு வருடங்களாக நெய்தும் குறையாகத் தறியிலிருக்கும் சேலையை நெய்திட வேண்டும். இது வேங்கடத்தின் கொள்கையை உறுதியைக் குலைத்து விடுகிறது. பட்டுச் சேலை வாக்குறுதியை கைவிடாமல் தம் கட்சியின் போராட்டத்தைக் கைவிடுகின்றார்.

வேங்கடத்தின் மேல் கோபப்படுகின்றனர். மீண்டும் மிகுதிச் சேலையை நெய்திட வாய்க்குள் பட்டு நூலை மறைத்தெடுத்துச் செல்கையில் பிடிபட்டு அடித்து உதைக்கப்படுகிறார்.

அவர் மீது வெறுப்புற்றிருந்த தோழர்களும் நூலுக்காகத் தான் போராட்டத்தைக் கைவிட்டதாக அகன்று செல்கின்றனர்.

ஒரு பட்டுச் சேலையின் கனவுக்காகக் கட்சிக்கு விசுவாசமில்லாத ஏழைத் தொழிலாளி தான் வேங்கடம். படம் பார்க்கும் போது பட்டுச் சேலை தான் முக்கியமா? என்ற கேள்வி ஏற்படுகிறது.அது அக்காலம் சூழல் அவர்களது மன நிலைகளின் பிரதிபலிப்பை உணர முடியாததாகவும் இருக்கலாம். வறுமையும் பிழியப்படும் உழைப்பின் கனத்தையும் உணர்ந்திடப் படைக்கப்பட்ட பாத்திரம்.

திருடனென்று கைது செய்யப்பட்டு சிறை சென்ற வேங்கடம் படுத்த படுக்கையாகக் கைகால் வழங்காமல் கிடக்கும் மகளைப் பார்க்க இரண்டு நாட்கள் அனுமதி பெற்று இரு பொலிசாருடன் ஊருக்கு வருகிறார். பராமரிக்க ஆளின்றியிருக்கிறாள் மகள். நஞ்சு கலந்த சோறையூட்டி மகளைக் கொல்கையில் அச்சமூகத்தின் கையறு நிலை தான் மனதில் தோன்றுகிறது.

பதினாறு வருடங்களாக நெய்தும் பாதி கூட முடிக்காத சேலையை அரிவாளால் வெட்டிக்கொண்டு வந்து பார்க்கையில் தலை மூடப்பட்டால் கால் மூடவில்லை. கால் மூடினால் முகம் தெரிகிறது. திரும்பத் திரும்ப ஓடியோடி அதைச் செய்கிறார் வேங்கடம்.

எந்த விதமான வணிகச் சமரசங்களுமற்ற திரைப்படம் காஞ்சிவரமெனலாம். பதினாறு வயதினிலே பூச்சுகளற்ற கிராமத்தைக் காட்டியதைப் போல காஞ்சிவரத்தில் நெச வாளரின் வறுமையும் வாழ்வும் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது.இடையிடையே சம்பந்தமற்று வந்து போகும் நகைச்சுவை நடிகர்கள் எவருமில்லை.கனவுப் பாடலும் இல்லை. கசங்கிய ஆடைகளுடன் தான் அனைவரும் தோன்றுகின்றனர். ஒரு சமூகத்தின் பாசாங்கற்ற வாழ்வு திரையில் தெரிகையில் இது வழமையான தமிழ்ச் சினி-மா அல்ல என்ற உணர்வேற்படுகிறது. சேரனின் பொற்காலத்தில் மீனா நெச வடித்த படியே முரளியுடன் பாட்டுப்பாடுவது தான் நினைவுக்கு வருகிறது. ஏதோ சமூகப் பிரச்சனையைத் தொட்டுச் செல்வொமென்று அதை இடையிடையே தூவி மசாலா மணக்கக் கொடுக்கும் படங்கள் பாட்டினாலும் பளபளப்பாலும் புரட்சிப் படங்களெனப் புழுகப்படுவதைத் தான் பார்க்கிறோம். சங்கர் இந்தியாவ-ின் புகழ் பெற்ற இயக்குனர் எனத் தலையில் வைத்துக் கூத்தாடுகிறார்கள். இந்தியன் படத்தில் இலஞ்சத்தை ஒழிக்க ஊர்மிளாவின் கவர்ச்சி செந்தில் கவுண்டமணி மனிசா இன்னும் பல துணைகளைத் தேடினார். பருத்திவீரன் வெய்யில் காதல் சுப்பிரமணியபுரம் யதார்த்த சினிமாக்கள் என்பவர்கள் காஞ்சிவரம் திரைப்படம் பார்த்தால் சமூகப் பிரச்சினை யதார்த்தம் பற்றிய விடயங்களை சொல்லும் படம் இதுவே என்பதை ஒத்துக்கொள்வார்கள்.

-தர்மினி


**PURANEGUMA (NELSIP) NORTHERN PROVINCE**

**புறநெகும திட்டத்தில் பிரதேசசபைகளினூடாக மேற்கொள்ளப்படும் கட்டட அமைப்பு வடிவமைப்பு வேலைகளுக்காக பட்டய குடிசார் பொறியியலாளர்களிடமிருந்து (Chartered Civil Engineers) பிரத்தியேக ஆலோசகர்களாக (individual Consultant) தெரிவுசெய்வதற்கான "ஆர்வத்தை வெளிப்படுத்தும்" (Expressions of Interest) அறிவித்தல் - 2012**

1. வடமாகாண பிரதமசெயலாளர் கட்டட வடிவமைப்பு (Design) கட்டுமானமும் (Construction) சேவைகளின் அடிப்படையில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தை பெற்றவர்களும் பொதுக்கட்டமைப்புக்களில் (Public Building) முன் அனுபவத்தை பெற்றவர்களுமான பட்டய குடிசார் பொறியியலாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்தலை கோருகின்றார்.

ஆர்வத்தை வெளிப்படுத்தலானது கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு 16.07.2012ஆம் திகதி 3.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. பிரத்தியேக ஆலோசகர்கள் தங்களின் சுயவிபரக்கோவையுடன் தங்களால் நிறைவேற்றப்பட்ட இதேபோன்ற திட்டங்களின் சுருக்க விபரத்துடன் கட்டட வடிவமைப்பில் மென்பொருள்களில் நெருங்கிய தொடர்பை (Familiarity Of Design Software Packages) கொண்டவர்களாகவும் வேறு ஏதாவது இதனுடன் தொடர்பான தகவல்கள் இருப்பின் அவற்றையும் தரப்படல் வேண்டும்.

3. பிரதம செயலாளர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை அவர்களின் அனுபவம் (Experience) மற்றும் செயல்திறனை (Performance) வைத்து சுருக்கிய படிவத்தை (Short list) தயாரித்து அவர்களிடமிருந்து வடிவமைப்பிற்கான விலை கோரலைக் கோருவார்.

4. வடமாகாண பிரதம செயலாளர் ஏதாவது ஒரு விண்ணப்புதாரரை அல்லது விண்ணப்பதாரர்களை சுருக்கிய படிவத்தில் சேர்த்தல் (Short list) அல்லது சேர்க்காமல் விடுதல் அல்லது முழு நடைமுறைகளையுமே எதுவித காரணமுமின்றி தடை-செய்யும் உரிமையை கொண்டுள்ளார். இவ்வாறான நிலைகளுக்கு எதுவித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இந்த ஆர்வத்தை வெளிப்படுத்தலை (Expressions of Interest) மாகாண திட்டப்பணிப்பாளர், புறநெகும திட்டம், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், முதியோர் இல்ல வளாகம், A9 வீதி, கைதடி என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**ர.விஜயலட்சுமி**
**பிரதம செயலாளர்,**
**வடமாகாணம்.**
**02-07-2012.**

# அபிவிருத்தியில் எழுச்சிபெறும் வடக்

நாட்டில் நிலவிய 30 வருட கால யுத்த சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுள்ள இவ்வேளையில் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்று நாட்டு மக்களுக்கு சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொடுக்கும் பெரும் முயற்சியில் அனைவரும் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி அரசாங்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. நாட்டில் எவ்வாறான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

ஊடக உதவியின்றி நாட்டை முன்னேற்ற முடியாது. இதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கத் தகவல் திணைக்களம் விஷேட அபிவிருத்தித் திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றது. இத்திட்டமானது இலங்கையில் குறிப்பாக வட மாகாணத்தில் நடைபெறும் அபிவிருத்திச் செய்திகளை வெளிக்கொணர்கிறது.

**வடக்கின் முதலாவது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் வவுனியா மாவட்டத்தில் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதுடன் இங்கு 300 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதை எமக்கு காணக்கிடைத்தது.வடக்கில் கடமையாற்றும் அரச உழியர்களின் நன்மை கருதியும் கடமைகளை கிரமமாக மேற்கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தும் வகையிலுமான இலவச வீடமைப்புத் திட்டத்தை அரசாங்கம் முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளது.**



### மன்னார் - முல்லைத் தீவில் 10000க்கு மேற்பட்டவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்பு!

மன்னார் மற்றும் முல்லைத் தீவு மவட்டங்களில் புதிதாக இரண்டு தொழிற் பேட்டைகள் அமைக்கப்பட உள்ளதாகவும் அவற்றின் மூலம் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட நேரடித் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்க உள்ளதாகவும் கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிசாரட் பதியூதீன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

கடந்த மூன்று வருடங்களுக்குள் மன்னார் வவுனியா முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களில் வீதி ரயில் சேவை குடிநீர் மின்சாரம் சுகாதாரம் மீன்பிடித் துறை என பலதரப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.30 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்வதற்கு ஏற்ற வகையில் மல்வத்து ஓயா புனரமைப்புக்கு 8000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.அதேபோன்று குடி நீர் வழங்கும் திட்டத்துக்காக மன்னாருக்க 4000 மில்லியனம் வவுனியாவிற்கு 4200 மில்லியனும் முல்லைத் தீவுக்காக 2500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.மின்சார வசதிகளை மெற்கொள்ளவும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைத் தீவில் 50 வீதத்துக்கும் மேலான வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன.

### இது தொடர்பில் மாவட்டச் செயலாளர்களின் தகவல்:


மன்னார் வவுனியா முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திக்கு அரசாங்கம் 46211 மில்லியன் ரூபாவை ஒதுக்கி உள்ளதாக சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் செயலாளர்கள் தெரிவித்தனர்.அதன்படி மன்னார் மவட்டத்துக்கு 11584 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டத்துக்கு 14479 மில்லியன் ரூபாவும் முல்லைத் தீவு மாவட்டத்துக்கு 20148 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் இந்த மூன்று மாவட்டங்களிலும் வீதி அபிவிருத்தி வீடமைப்பு குடி நீர் மின்விநியோகம் நீர் பாசனம் மீன்பிடித் துறை கல்வி சுகாதாரம் கூட்டுறவு போக்குவரத்து தபால் உட்பட அடிப்படை துறை தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக மூன்று மாவட்டங்களினதும் செயலாளர்களான சரத் ரவீந்திர பந்துல ஹரிச்சந்ர என். வேதநாயகம் ஆகியோர் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட ஊடகவியலாளர்களும் இங்கு எம்மோடு பிரதேச ஊடகவியலாளர்களும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மெற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தியையும் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஊடகவியலாளர்களுக்கு நேரடியாகக் கண்டுகொள்ளக் கூடிய வாய்ப்புக் கிட்டியது.

### வடக்கின் முதலாவது அரச ஊழியர் வீடமைப்புத் திட்டம்!

வடக்கின் முதலாவது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் வவுனியா மாவட்டத்தில் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதுடன் இங்கு 300 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதை எமக்கு காணக்கிடைத்தது.வடக்கில் கடமையாற்றும் அரச உழியர்களின் நன்மை கருதியும் கடமைகளை கிரமமாக மேற்கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தும் வகையிலுமான இலவச வீடமைப்புத் திட்டத்தை அரசாங்கம் முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளது.இத்திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு வீடுகளை அமைப்பதற்காக தலா 40 பேரச் காணியையும் 5 இலட்சம் ரூபாவைக் கடனுதவியாகவும் வழங்கி உள்ளது.வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியினால் வழங்கப்படும் இக் கடன் தொகைக்கு 11 வீத வட்டி அறவிடப்படுகின்றது.வீடுகளை அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஓமந்தைப் பகுதியில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கான 200 வீடுகளும் இரட்டைப் பெரிய குளம் பகுதியில் சிங்கள் உத்தியோகர்களுக்கான 100 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மீள் குடியேறிவர்களுக்கும் புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. முசலி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 175 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதுடன் அவற்றில் 56 வீடுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.






# கு!


## கனகராயன் குளம் பகுதியில் பல மில்லியன் செலவில் அபிவிருத்தி!

கனகராயன் குளம் பகுதியில் பல மில்லியன் செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து அப்பிரதேச மக்கள் பெரிதும் நன்றி பாராட்டுகின்றனர்.குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளையும் அதன் மூலம் மக்களுக்குக் கிட்டும் பயனையும் நேரடியாகப் பார்வையிடுவதற்கும் அங்கு வாழும் மக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கும்




வாய்ப்புக் கிட்டியது.1889இல் அமைக்கப்பட்டிருந்த கனகராயன் குளத்தின் அணைக்கட்டு யூத்த நடவடிக்கைகள் காரணமாக பழுதடைந்திருந்தது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் ஏற்பாட்டில் 37 மில்லியன் ரூபா செலவில் ஒரு வருட காலத்தில் அணைக்கட்டு மற்றும் மதகு புனரமைக்கப்பட்டதுடன் புதிதாக கால்வாயும் அமைக்ப்பட்டுள்ளது. இதனால் பிரதேசத்தைச் சார்ந்த 210 விவசாயக் குடும்பங்கள் பயனடைந்து





வருகின்றனர்.இதன் மூலம் தற்போது 314 ஏக்கரில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## விவசாயிகளுக்கு வழி காட்டும் கனகராயன் குளம் பயிற்சி நிலையம்

மற்றுமொரு மைல் கல்லாக வவுனியா மாவட்டத்தின் கனகராயன் குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விவசாயப் பயற்சி நிலையம் வெற்றிகரமாக இயங்கி வருவது குறித்து அப்பிரதேச விவசாயிகள் பெரிதும் நன்றி பாராட்டுகின்றனர்.

28 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இதன் மூலம் பிரதேச விவசாயிகளுக்கு நவீன விவசாய நுட்பங்கள் உபகரனங்கள் குறித்தும் விவசாயத்துறையின் மேம்பாட்டுக்கான பயிற்சிகளும் ஆலோசனைகளும் அறிவுறைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.கடந்த வருடம் ஜுலை 14இல் ஆரம்பமான இந்த நிலையத்தின் மூலம் இதுவரை 49 பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2903 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.தங்குமிட வசதிகளுடனான பயிற்சித் திட்டங்கள் இந்த நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.நவீன நீர்ப்பாசன முறை உரம் தயாரிப்பு முறை நோய் தடுப்பு முறை உட்பட பண்ணை வளர்ப்பு முறைகள் தெடர்பான பல பயிற்சிகளும் ஆலோசனைகளும் இந்த நிலையத்தின் மூலம் வழங்ப்படுகின்றன.இதன் மூலம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மட்டுமன்றி வெளி மாவட்ட விவசாயிகளும் பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் பெற்று நன்மை அடைந்து வருகின்றனர்.

## வடக்கு மக்களின் சிரமத்தைத் தவிர்க்கும் முசலிபாலம்!



மன்னார் மாவட்டத்தின் முசலிப் பகுதியில் அருவியாறு ஊடாக அமைக்கப்பட்டுள்ள புதிய பாலம் யாழ்ப்பாணம் மன்னார் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பெரிதும் வசதியாக அமைந்துள்ளது.இந்த மாவட்டங்களுக்கான பயணத்தை அருவியாறு பாலத்தின் ஊடாக மேற்கொள்வதால் பயணத்தின் தூரத்தை 100 முதல் 150 கிலோ மீட்டர் வரை குறைத்துக் கொள்வதற்கான வசதி ஏற்படுகின்றது.நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் அரசாங்கம் வீதி அபிவிருத்தி குறித்து விடே கவனம் செலுத்தி வருகின்றது.

அதன்படி இந்தப்பாலம் அமைக்கப்பட்டது தங்களுக்கு பெரிதும் வசதியாக அமைந்துள்ளதென பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

450 மில்லியன் ரூபா செலவிலான இப்பாலத்தின் நிர்மானப் பணிகள் ஒருவருட காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது இதனூடாக மக்கள் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.இந்தப்பாலம் ஊடாக மன்னார் புத்தளத்துக்கான பயணத்தின் தூரம் 100 கிலோ மீட்டரால் சுருங்குவதுடன் இதனூடான யாழ் புத்தளத்துக்கான பயணத்தின் தூரம் 150 மீட்டரால் குறைவடைகிறது.இப்பாலம் அமைந்துள்ள வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

## மடு உற்சவத்திற்கு ரயில் சேவை !

அடுத்த வருட மடு உற்சவத்திற்கு பக்தர்களுக்கு ரயில் மூலம் பயணம் செய்வதற்காக மன்னார் ரயில் பாதை அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரயில் பாதை அமைக்கும் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதை நேரடியாகக் காணக்கூடிய வாய்ப்பும் கிட்டியது.மதவாச்சியில் இருந்து மன்னார் வரைக்குமான 114 கிலோ மீட்டர் தூரத்துக்கான ரயில் பாதை அமைக்கும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற் கட்டமாக மடு வரைக்குமான பகுதியை இவ்வருட இறுதிக்குள் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.இரண்டாம் கட்டமாக மன்னாருக்கும் மூன்றாம் கட்டமாக தலை மன்னாருக்கான 25 கிலோ மீட்டர் தூரத்தையும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றினால் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரயில் சேவை ஆரம்பிக்கப்டுவதை பிரதேச மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கின்றனர். ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டால் தங்களின் தொழிற் துறையும் பொருளாதாரமும் உயர்வூ பெறும் என்றும் பிரதேசத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மற்றும் தலை மன்னார் பகுதிளில் மீன் பிடித்துறையின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் பல வழிகளிலும் உதவி வழங்கி வருகின்றது.குறிப்பிடப்பட்ட பிரதேசங்கிளல் வாழும் மீனவர்களின் மேம் பாட்டுக்காக வசிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன் புதிய மீன்பிடிப் படகுகள் மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றையூம் வழங்கி வருகின்றது. மீனவர்களுக்கொன இலகு கடன் வசதிகளுக்கான ஏற்பாடுகளையூம் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அத்துடன் அடிப்படை வசதிகளையும் செய்து வருகின்றது. இப்பகுதியில் பெருமளவில் மீன் கிடைத்து வருகின்றது. தலைநகரிலிருந்து செல்லும் வர்த்ததகர்கள் அவற்றை நேரடியாகக் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

எங்கும் வீதி அபிவிருத்தி! மன்னார் வவூனியா மாவட்டங்களில் பெருமளவிலான வீதி அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளதுடன் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள மேற்கொள்ளப்பட்டு வருவதை காணக்கிடைத்தது. இவ்வாறான பாரிய அளவிலான நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டங்களுக்கென அரசாங்கம் பல்லாயிரம் மில்லியன் ரூபாவை செலவிட்டு வருகின்றது.

அவ்வாறான திட்டங்களில் மன்னார் யாழ் வீதியில் வீதியில் அமைக்கப்பட்ட பெரிய பாலம் முக்கியமான ஒரு இடத்தை வகிக்கின்றது.

ஷெரீப்

### மூதூர் - குச்சவெளி நெடுஞ்சாலை விவகாரம்

# வர்த்தமானி அறித்தலின் நகலை கோருகிறது மேன்முறையீட்டு நீதிமன்றம்

மூதூர் முதல் குச்சவெளிவரையில் புதியநெடுஞ்சாலைஒன்றை அமைக்கும் திட்டத்தைஎதிர்த்து தொடரப்பட்டவழக்கில், இத்திடடம் தொடர்பானவர்த்தமானிஅறிவித்தலின் நகலொன்றைசட்டமாஅதிபரிடம் இருந்துகொழும்பு மேல்முறையீட்டுநீதிமன்றம் கோரியுள்ளது.

கிண்ணியாபகுதியைசேர்ந்தவிவசாயிகள் இந்தநெடுஞ்சாலைத் திட் டத்தைஎதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குதொடர்ந்தனர்.

மூதூர் - குச்சவெளிநெடுஞ்சாலைதிட்டத்தினால் தாம் தமது நிலங்களை இழக்கவிவசாயிகள் தமதுமனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநெடுஞ்சாலைதிட்டத்தின் காரணமாககிண்ணியாவிவசாயிகள் தாம் தமதுகாணிகளை இழக்கநேரிடும் என்றுதெரிவிக்கின்றனர்.

சம்பூர் வர்த்தகவலயத்துக்கான சாலைபோக்குவரத்துவசதியைமேம்படுத்துவதற்காகவே இந்தநெடுஞ்சாலையைஅமைக்கதிட்டமிட்டுள்ளதாகஅரசாங்கம் கூறுகிறது.

கிண்ணியாவழியில் அல்லாமல் வேறுவழியாக இப்பாதையை அமைக்கும் சாத்தியம் உள்ளதுஎன கிண்ணியாவிவசாயிகள் தமதுமனுவில் குறிப்பிட்டுள்ளனர். இந்தநிலையில் அரசாங்கத்தின் வர்த்தமானிஅறிவிப்பைபரிசீலித்தபின்னர் இந்தமனுவைவிசாரிப்பது பற்றிதீர்மானிக்கப்படும் என கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

### பலப்பிட்டியவில் மீனவர் படகுடன் மாயம்

பலப்பிட்டிய பகுதியிலுள்ள மாது ஆற்றில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற 70 வயதான மீனவரொருவர் படகுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீசிய கடும் காற்றை தொடர்ந்து காணாமல் போயுள்ளார். இம்மீனவர் பலப்பிட்டியவைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இம்மீனவர் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத நிலையில் அஹுங்கல்ல பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

## நயினாதீவுக்கு 24 மணிநேர மின்சாரம்: மின்பிறப்பாக்கி வந்தடைந்தது

நயினாதீவுப் பிரதேசத்திற்கு விரைவில் 24 மணிநேரம் மின்சாரம் வழங்கவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சிவாராசாதெரிவித்துள்ளார்.

ஆதற்காக கொழும்பில் இருந்து மின்பிறப்பாக்கி நயினாதீவுக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை காலமும் நயினாதீவுப் பிரதேசத்திற்கு காலை 9 மணிதொடக்கம் 2 மணிவரையிலும் மாலை 6 மணியில் இருந்து 12 மணிவரையும் மின்சாரம் வழங்கபட்டு வந்தது இதனால் இப்பகுதியில் வாழந்த மக்கள் பெரும் பிச்சனைகளை எதிர்நோக்கி வந்ததுடன் மாணவர்கள் அதிகாலையில் கல்விகற்பத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர். குறுகிய காலத்தில் இந்தப்பிரதேசம் முழுவதற்கு 24 மின்சாரம் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு

(வட்டக்கச்சி)

இந்திய அரசின் நிதியுதவியுடன் UNICEF நிறுவன அனுசரணையில் மாணவர்கள், சுயதொழில் முயற்சியாளர்களிற்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடி யேறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளில் அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றன. இதன் ஒரு அங்கமாகவே மேற்படி துவிச்சக்கரவண்டி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



வவுனியா நகரசபைக்கு சொந்தமான திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்தின் கிணற்றில் காணப்பட்ட சடலத்தினை வவுனியா பொலிஸாரால் பார்வையிடுவதையும் கிணற்றில் சடலமுள்ளதையும் படங்கிளல் காணலாம்.
(படங்கள்: வவுனியா நிருபர்)

# போலி பட்டங்களை வழங்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

## மட்டக்களப்பில் சம்பவம்

போலியான முறையில் முக்கிய பிரமுகர்களின் கையெழுத்துக்களை இட்டு பெறுமதியான பட்டங்களை பல்வேறு அமைப்புகளின் பெயரில் வழங்கி இலட்சக்கணக்கில் பணம் பெற்றுவந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்தார்.

காலியை சேர்ந்த குறித்த நபர் பயணம் செய்த காரிலிருந்து சமஸ்த லங்கா சம்மான உபாதி சரசவிய - சமஸ்த லங்கா நெணகுண பதனம என்ற அமைப்பின் பெயரில் அரச இலட்சினை பொறிக்கப்பட்ட 300 போலியான நற்சாட்சிப்பத்திரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு "மங்களராம ரஜமஹா விகாரையின் விகாராதிபதியும் மட்டக்களப்பு - அம்பாறை வட்ட பிரதி பிரதம சங்கநாயக்கருமான அம்பிட்டிய சுமணரத்ன தேரரிடம் நற்சாட்சிப்பத்திரங்களில் கையெழுத்து பெற நேற்று காலை வந்த போதே குறித்த நபரை விகாரையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை மட் டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதேச சபை கனயீனம்: வரியிறுப்பாளர்கள் கவலை

வலிகாமம்

யாழ். குடாநாட்டு வங்கிகள் சிலவற்றில் வட்டி வீதம் அதிகரித்துள்ளபோதிலும் அதனை உரிய முறையில் பிரதேச சபைகள் இனம் கண்டு பயன்படுத்த தவறுவதினால் பல இலட்சம் ரூபாக்களை வருடாந்தம் இழக்கும் நிலமை காணப் படுவதாக வரியிறுப்பாளர்கள் கவலைப்படுகின்றார்கள்.

பிரதேச சபைகளின் புதிய தவிசாளர்கள் இந்த வங்கிகளி வைப்பகள் சம்பந்தமாக உரிய பிரதேச சபைகளின் செலாளர்கள் கணக்காளர்களுடன் தொடர்பு கொண்டு அது சம்பந்தமான விபரங்களை பெறாமையினாலும் மற்றும் அந்த விடயத்தையிட்டு கருத்தில் கொள்ளமையாலும் இத்தகைய துர்ப்பாக்கி நிலமை ஏற்பட்டுள்ளதுடன் மக்களுக்கு செவை செய்யக் கூடிய வருவாயைக் கூட இழந்து வருகின்றார்கள். கடந்த காலத்தில் பிரதேச சபைகளின்அதிகாரிகள் தமக்கு பிடித்தமான வங்கிகளில் பணத்தை வைப்பிட்டதுடன் தொடர்ந்தும் வங்கிகளின் வட்டி வீதத்தை பார்வையிட்டு மாற்றவோ அன்றி நிலமையை சபைக்கு தெரிவிக்காத நிலமையே தொடர்கதையாக இருப்பதினால் பிரதேச சபைகள் உழைக்க வேண்டிய இலாபத்தை பெறாத தன்மை காணப்படுகின்றது.

இதனால் வருடாந்தம் ஒரு தொகையை இலாபமாக பெற்று மக்களின் தேவைகளை பீர்தி செய்யக் கூடிய வாய்ப்புகள் இரந்தும் அதனை ஈடுசெய்யாமையையிட்டு பொது மக்களும் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

# வவுனியா வேப்பங்குளத்தில் ஆணிண் சடலம் மீட்பு

வவுனியா

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள நகரசபைக்கு சொந்தமான திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் உள்ள கிணரொன்றில் இருந்து ஆணிண் சடலமொன்றினை வவுனியா பொலிஸார் நேற்று (3.7) மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு (2.7) மேற்படி நிலையத்தின் காவலாளி நீரில் அசுத்தமாக மணம் வருவதை அவதானித்தபின்னர் கிணற்றை பார்த்தபோது அதனுள் சடலமொன்று இருப்பதை அவதானித்துள்ளார்.

இதனை அடுத்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்கு அவர்கள் வருகை தந்நதிரந்த போதிலும் சடலத்தினை அகற்ற வில்லை.

இதனை அடுத்து இன்று காலை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி எரிக்பெரேரா மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பார்வையிட்டதுடன் மாவட்ட நீதிவான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மரணமடைந்தவர் எவ்வாறு நகரசபைக்கு சொந்தமான பிரதேசத்திற்குள் வந்தார்?, மரணமடைந்து எவ்வளவு நாட்கள் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் காவலாளிகள் இருவரை தீவிர விசாரணைக்கும் உட்படுத்தியுள்ளனர்.

## வவுனியா வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டம்

வவுனியா

வவுனியா வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டம் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் அல்காஜ் பி. எஸ். அப்துல்லா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர், கிராமசேவை உத்தியோகஸ்தர்கள், மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் சமூகமளிக்வுள்ளதனால் வர்த்தக நிலையங்கள் தொடர்பான சில முக்கிய தீர்மான ங்கள் எடுக்கப்படவுள்ளதனால் அனைத்து வர்த்தகர்களையும் சமூகமளிக்மாறு கோரப்பட்டள்ளதுடன் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மாத்திரமே சமூகமளிக் முடியு மெனவும் வர்த்தகர் சங்கத்தினர் தெரிவத்துள்ளனர்.


## கணக்கு கேட்டதால்தான்.....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

பொறுப்பேற்றுள்ள கடிதம் மாத்திரம் இவரிடம் உள்ளது. அக் கடிதத்தில் வைத்துக்கொண்டு அவர் பொறுப்பேற்க முடியாது. மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நியமனம் தொடர்பாக கடிதங்கள் வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த அதிபர் நியமனமானது கல்வி அமைச்சில் அதன் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற தவறுகள் இவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கு மக்கள் பிரதிநிதியான அமைச்சர், எம்.பி.மார்களை நாடுவது தவறான செயற்பாடல்ல. இதற்கு அரசியல் சாயம் பூசப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்க விடயம் என்றும் அங்கு கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலையில் புதிய மாணவர்களை அனுமதிக்கும்போது பணம் அறிவீடு செய்யப்படுவதில்லை. இதனை ஏற்றுக்கொள்ளாத பழைய மாணவர்கள் சங்கம் இந்த புதிய அதிபர் நியமனத்தை விரும்புகின்றனர் என்றும் இந்த விடயத்தில் சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் பாடசாலை அதிபர் மற்றும் யாழ்.மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ் வரி பற்குணராசா, அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கள், ஆசிரியர்கள், நலன்விரும்பி கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

- *எஸ்..கே.பிரசாத்*




# பெண் உற்சாகமாக இருந்தால்

பெண்களைப்பற்றி சரியாக புரிந்து கொள்ளாமலேயே பெரும்பாலான ஆண்கள் "பெண்கள் ஒரு புதிர், அகம்பாவம் பிடித்தவர்கள்.... என, அவர்களை ஒதுக்கித் தள்ளுகின்றனர். ஆனால் பெண்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் புறக்கணிக்கப்படுவதாலேயே வெறுப்படைகின்றனர் என்கின்றனர் மனோதத்துவ நிபுணர்கள். மனைவியை மகிழ்ச்சிப்படுத்த ஆண்கள் ஒரு சில விஷயங்களை செய்தால் போதும் என்கின்றனர் அவர்கள்.

பெண்கள் உற்சாகமாக இருந்தாலே குடும்பம் உற்சாகமாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். மனோதத்துவ நிபுணர்கள் கூறும் அறிவுரையை படியுங்களேன்.

மனைவி என்பவள் வேலைக்காரி அல்ல. அதேபோல் சம்பாதித்து கொடுக்கும் மிசினும் அல்ல. அவளும் உணர்வு பூர்வமானவள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சரிசமமாக நடத்தவேண்டும் என்பதையே ஒரு பெண் எதிர்பார்ப்பாள்.

அம்மா போல யாராலும் சமைக்க முடியாதுதான். ஆனால் மனைவியின் சமையலை ஆகா, ஓகோ என்று பாராட்டுங்கள். அவர்கள் உச்சிக்குளிர்ந்து போவார்கள்.

விடுமுறை நாட்களில் விரும்பிய படி ஓய்வு எடுக்க அனுமதிக்க வேண்டும். அன்றும் விசேஷமாக சமையல் செய்ய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது. சமையல் அறையில் மனைவிக்கு கணவரும் உதவ வேண்டும்.

எல்லாவற்றையும் அவசர, அவசரமாக செய்ய வேண்டும் என தொந்தரவு செய்யக் கூடாது. குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்றால் மனைவியை திட்டக் கூடாது. குழந்தையை பராமரிக்கும் பொறுப்பு இருவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மனைவி உடுத்தும் உடை-களைப் பார்த்து இந்த உடை உனக்கு நன்றாக இருக்கிறது என பாராட்ட வேண்டும்.

வருமானம் முழுவதும் கணவனிடமே இருந்தால், மனைவியை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். தினமும் ஒருமுறையாவது இரண்டு பேரும் சேர்ந்து விவாதித்து, நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

நன்றாக, சிரித்த முகத்துடன் குழந்தைகள் படுக்கைக்குச் செல்ல வேண்டும். குழந்தைகளை அடிமை போல் நடத்தக் கூடாது. இதில் கணவர்களின் பங்கு முக்கியம். படுக்கை அறையில் போர் அடிக்கும் வகையில் கணவர் நடந்து கொள்ளக் கூடாது.

பெரும்பாலான பெண்களின் மனதை வாட்டும் விஷயம் குண்டாக இருப்பது. ஏனெனில் உடலில் சதை போடுவது பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது. கொழுப்பு, சதையை குறைக்க ஒரு மருந்து கிடைத்தால் போதும். கணவர் அதை வாங்கிக் கொடுத்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

பெண்கள் விரும்புவது இவ்வளவு தான். இவற்றை கணவரோ, பெற்றோரோ, குழந்தைகளோ நிறை வேற்றினால் போதும். அந்த குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் தான்.



# மாமியார் - மருமகள் பிரச்சனை காரணம் ஆண்களின் பலவீனம்தான்

மாமியார் மருமகள் பிரச்சனை இல்லாத குடும்பமே இல்லை எனலாம். இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய பெரிய ஆராய்ச்சியெல்லாம் தேவையில்லை. இதற்கு அடிப்படை பெண்களின் இயல்புதான். மாமனார் - மருமகன் பிரச்சனை ஏன் எழுவதில்லை? பொதுவாக பெண்கள் தங்கள் வாழ்வுக்கு யாரையாவது சார்ந்திருக்க வேண்டிய நிலையில்தான் படைக்கப்பட்டுள்ளார்கள்.

பெற்றெடுத்துப் பேணிப் பாதுகாத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி, வளர்த்து ஆளாக்கிய அருமை மகனின் அன்பு முழுமையாக தனக்கே கிடைக்க வேண்டும் என்று தாய் விரும்புகிறாள். அதில் ஏதேனும் தொய்வு ஏற்பட்டால் அதற்குக் காரணம் புதிதாக வந்த தன் மருமகள்தான் காரணம் என்று நினைக்கிறாள்.

இதைப்போன்ற மனப்பான்மை புதிதாக வந்துள்ள மருமகளுக்கும் ஏற்படும்தானே! அவளும் ஒரு பெண் அல்லவா? தன் கணவரை முழுமையாக சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என நினைக்கும் அவள் எண்ணம்கூட தவறு என்று சொல்ல முடியாதுதான். கணவனின் அன்பு சற்று மாறுபடுவதாக அவளுக்குத் தோன்றும்போது அதற்குக் காரணம் தன் மாமியார்தான் என எண்ணுகிறாள்.

ஆக, மாமியார் - மருமகள் இடையே ஏற்படும் மனக்கசப்புக்கு அடிப்படைக் காரணம் தன் மீது இருவரும் கொள்கின்ற அன்பின் போட்டிதான் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு ஆணுக்குப் பெரும் சவாலே தாய்க்கும் தாரத்திற்கும் இடையில் நடுநிலையாக வாழ்ந்து காட்டுவதே. மற்றெல்லா சவால்களும் இதற்கப்பால்தான்!

ஒரு ஆண்மகன் தனது வாழ்க்கையின் மிக முக்கியமான இந்த இரு உறவுகளின் உணர்வுகளையும் மதித்து இருவரின் மீதும் தனக்குள்ள அன்பு சரிசமமானது தான் என்பதை எடுத்துக் காட்டி இருவரும் தனக்கு இரண்டு கண்கள் என்று புரிய வைத்து விடவேண்டும். தன்னைப்பெற்ற அன்னை தனக்கு உயிர் போன்றவள். தன் மனைவி உடல் போன்றவள் என்ற உணர்வுடன் இருபக்கமும் ஒரே கண்ணோட்டத்துடன் பாசத்தைப் பொழிய வேண்டும். மனதுக்குள் குறை தோன்றினாலும் அதைப் பெரிதுபடுத்தக் கூடாது.



தன் மனைவியின் காரணமாக தாயின்மீது தனக்குள்ள அன்பும் பாசமும் அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை என்று மகன் தாயிடம் அதிக பாசம் காட்டினால் அந்தத் தாய் மருமகளை நேசிப்பாள். அதே போல தன் தாயின் தூண்டுதலாலேயே உன்னை நான் மேலும் நேசிக்கின்றேன் என்று மனைவியிடம் காட்டிக் கொண்டால் மருமகள் மாமியாரைத் தன் தாய்போல் கருதுவாள். இவ்வாறு அன்பை இருபக்கமும் ஆண்கள் பொழிந்தால் குடும்பத்தில் பிரச்சனைக் குறையும்.

### பொய்கூட சொல்லலாம்!

இவ்வாறு நடந்து கொள்ளும்போது சில சமயங்களில் பொய் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டால் மனைவியிடம் பொய் சொல்வதற்கும் அனுமதி உண்டு.

மனிதன் மூன்று விஷயங்களில் பொய்ப் பேசலாம். 1. போர்க் களங்களில், 2. இருவருக்கிடையே சமாதானம் செய்வதற்காக, 3. தன் மனைவியைத் திருப்தி படுத்துவதற்காக என்ற நபிமொழியை நினைவில் கொண்டு செயல்பட்டால் இருவரையுமே சமாதானம் செய்து வாழ்வது சிரமமானதல்ல, எளிதானதுதான்.

மாமியார் - மருமகள் பிரச்சனை ஏற்பட்டால் அதற்குக் காரணம் ஆண்களின் பலவீனம்தான் என்பதை உணர்ந்து அதைச் சீர் செய்வதற்கு நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும்.

தாய்க்காக தாரத்தையோ, தாரத்திற்காக தாயையோ வெறுத்து ஒதுக்கக் கூடாது. இருவரும் பெண்கள் தான். பெண்மைக்கு உரிய பலவீனமான குணங்கள் இருசாராரிடமும் இருக்கவே செய்யும். அதை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

மாமியார் மருமகள் இருவரும் ஒத்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அவ்விருவரும் தனித்தனியாக வாழ ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதும் இருவருக்கும் நாம்தான் செலவு செய்ய வேண்டும்.

இருவரையுமே பாசத்துடன் கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு நடந்து கொண்டால் குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

ஒவ்வொரு ஆணும் நன்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அது, சுவர்க்கம் தாயின் காலடியில் தான் உள்ளது மனைவியின் மடியில் அல்ல.

உலகில் நாம் எந்த தவறைச் செய்தாலும் மன்னித்து விடலாம். ஆனால், பெற்றோருக்கு இழைக்கும் துன்பத்திற்குரிய தண்டனையை மட்டும் இம்மையிலேயே வெகு சீக்கிரத்தில் அனுபவித்தே தீர வேண்டும். ஏனெனில் பெற்றோரின் மனக் கொதிப்பு நிச்சயம் பாதிக்கும். நாம் வேறு வகையில் எவ்வளவு நன்மைகள் செய்திருந்தாலும் சரியே ■

பகவத்கீதை பற்றி மகாகவி பாரதியாரின் விளக்கவுரையின் முன்னுரையில் உள்ள ஆன்மீகக் கருவூலத்திலிருந்து ஒரு சிறு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது.

புத்தியிலே சார்பு எய்தியவன், இங்கு, நற்செய்கை, தீச்செய்கை இரண்டையும் துறந்துவிடுகிறான். ஆதலால் யோக நெறியிலே பொருந்தும், யோகம் செயல்களிலே திறமையானது.

இங்கே கீதையில் பகவான் செய்யும் உபதேசத்துக்கெல்லாம் அடிப்படையாம் புத்தியிலே சார்பு எய்தலாவது, அறிவை முற்றிலும் தெளிவாக மாசுமறுவின்றி வைத்திருத்தல், தெளிந்த புத்தியே லோகத்திலே புத்தி என்று சொல்லப்படுகிறது. அறிவைத் தெளிவாக நிறுத்திக் கொள்ளுதலாவது யாதென்றால், கவலை நினைப்புக்களும் அவற்றுக்காதாரமான பாவ நினைப்புக் களுமின்றி அறிவை இயற்கை நிலைபெறத் திருத்துதல்.

"நீங்கள் குழந்தைகளைப் போலானாலன்றி, மோட்ச ராஜ்யத்தை எய்தமாட்டீர்கள்" என்று ஏசு கிறிஸ்து சொல்லியதும் இதே கருத்துக் கொண்டுதான்.

"குழந்தைகளைப் போலாய் விடுங்கள்" என்றால் உங்களுடைய லௌகீத அனுபவங்களையெல்லாம் மறந்துவிடுங்கள். நீங்கள் படித்த படிப்பையெல்லாம் இழந்துவிடுங்கள், மறுபடி சிசுக்களைப்போல தாய்ப்பால் குடிக்கவும், மழலைச் சொற்கள் பேசத் தொடங்குங்கள் என்பது கொள்கையன்று. இதயத்தைக் குழந்தைகளின் இதயம் போலவே நி'களங்கமாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்" என்பது கருத்து.

இதயம் தெளிந்தாலன்றி புத்தி தெளியாது. இதயத்தில் பரிபூரணமான சுத்த நிலையேற்படும் வரை, புத்தி இடையிடையே தெளிந்தாலும், மீட்டு மீட்டு குழம்பிப்போய்விடும்.

இதயம் சுத்தமானால், தெளிந்த புத்தி தோன்றும். பகவான் சொல்கிறார், "அந்த அறிவுத் தெளிவிலே



இதயம் தெளிந்தாலன்றி புத்தி தெளியாது. இதயத்தில் பரிபூரணமான சுத்த நிலையேற்படும்வரை, புத்தி இடையிடையே தெளிந்தாலும், மீட்டு மீட்டு குழம்பிப்போய்விடும். .... இதயம் சுத்தமானால், தெளிந்த புத்தி தோன்றும்

நிலைபெற்று நில், அர்ச்சுனா" என. அப்போது நீ செய்யும் செய்கை யாதாயினும் அது நற்செய்கையாம். நீ ஒன்றும் செய்யாதே மனம் போனபடியிருப்

போனபடியெல்லாம் வேலை செய்யலாம்.

இனி, இங்ஙனம் உரை கொள்ளாதபடி, நற்செய்கை தீச் செய்கை, அதாவது எல்லாவ-

அவனுக்குக்கூட ஆறு மாத காலம் விழிப்பு உண்டு. ஆனால், நீ தொழில் செய்யுமிடத்தே அதில் ஏற்படும் க'ட ந'டங்களுக்கு மனமுடைந்து ஓயாமல் துன்பப்

செய்துகொண்டிரு. நீ எது செய்தாலும் அது நன்றாகவே முடியும். நீ சும்மா இருந்தாலும், அப்போது உன் மனம் தனக்குத் தான் ஏதேனும் நன்மை செய்து

# இதயம் சுத்தமானால், தெளிந்த புத்தி தோன்றும்

பின் அஃதும் நன்றாம். நீ நற்செய்கை தீச் செய்கை என்ற பேதத்தை மறந்து, உனக்கு இ'டப்படி எது வேண்டுமாயினும் செய்யலாம். ஏனென்றால், நீ செய்வதெல்லாம் நன்றாகவே முடியும். உனக்குப் புத்தி தெளிந்து விட்டதன்றோ? புத்தி தெளிவுற்ற இடத்தே, உனக்குத் தீயன செய்தல் சாத்தியப்படாது. ஆதலால், நீ நல்லது தீயது கருதாமல் மனம்



கும்பகர்ணனாலேயே இயலாது.

'தமான செய்கையையும் துறந்துவிட்டு, அர்ச்சுனா நீ எப்போதும் தூங்கிக் கொண்டேயிரு" என்று கடவுள் உபதேசம் பண்ணியதாகக் கருதுதல் வெறும் மடமையைத் தவிர வேறொன்றுமில்லை.

ஏனென்றால், கடவுளே பின்வருமாறு சொல்கிறார் - மேலும், எவனும் ஒரு கணமேனும் செய்கையின்றி இருத்தல் இயலாது. எல்லா உயிர்களும், இயற்கையில் தோன்றம் குணங்களால் தமது வசமின்றியே தொழிலில் பூட்டப்பட்டிருக்கின்றன" என.

ஆதலால் மனிதன் தொழில் செய்துதான் தீர வேண்டும். எப்போதும் தூங்க

பட்டுக்கொண்டே தொழில் செய்யும் உலகத்தாரைப் போலே தொழில்

நீ ஒரு பொருளுடன் உறவாடும்போது, உன் மனம் முழுவதும் அப்பொருளின் வடிவமாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய்.

செய்யாதே. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் - அர்ச்சுனா உனக்குத் தொழில் செய்யத் தான் அதிகாரமுண்டு. பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போதுமில்லை" என.

ஆதலால், கடவுள் சொல்கிறார் - "கர்மத்தின் பயனிலே பற்றுத லின்றித் தான் செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கிறானோ அவனே துறவி. அவனே யோகி" என்று அறிவுத் தெளிவைத் தவற விடாதே. பின் ஓயாமல் தொழில்

கொண்டேயிருக்கும்.

உடம்பினால் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழிலன்று. ஜபம் தொழில் இல்லையா? படிப்பு தொழில் இல்லையா? மனனம் தொழில் இல்லையா? சாஸ்திரங்களெல்லாம், கவிதைகளெல்லாம், நாடகங்களெல்லாம், சட்டங்களெல்லாம், வேதங்களெல்லாம், புராணங்களெல்லாம், கதைகளெல்லாம், காவியங்களெல்லாம், தொழில்கள் அல்லவா? இவையெல்லாம் உடம்பால் செய்வதின்றி மனத்தால் செய்யப்படுவன

அன்றோ? அறிவுத் தெளிவைக் கலங்க விடாதே.

அப்பால், யோகம் பண்ணு. எதன் பொருட்டெனில் யோகமே செய்கைகளில் திறமையானது என்று பகவான் சொல்கிறார். தொழிலுக்குத் தன்னைத் தகுதியுடையவனாகச் செய்து கொள்வதே யோகம் எனப்படும்.

யோகமாவது சமத்துவம். "ஸ்மத்வம் யோக உச்யதே" அதாவது. பிறிதொரு பொருளைக் கவனிக்குமிடத்து, அப்போது மனத்தில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை ஆழ்ந்து, மனம் முழுவதையும் அதனுடன் வயப் படுத்திக் கவனிப்பதாகிய பயிற்சி.

நீ ஒரு பொருளுடன் உறவாடும் போது, உன் மனம் முழுவதும் அப்பொருளின் வடிவமாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய். "யோகஸ்த, குரு கர்மாணி" என்று கடவுள் சொல்கிறார். யோகத்தில் நின்ற தொழில்களைச் செய் என.

யோகி தன் அறிவைக் கடவுளின் அறிவு போலே விசாலப்படுத்திக் கொள்ளுதல் இயலும். ஏனென்றால், ஊன்றிக் கவனிக்கும் வழக்கம் அவனுக்குத் தெளிவாக அர்த்தமாய் விடுகிறது. ஆதலால், அவனுடைய அறிவு தெய்விகமான விசாலத் தன்மை பெற்று விளங்குகிறது. அவனுடைய அறிவுக்கு வரம்பே கிடையாது. எனவே, அவன் எங்கும் கடவுள் இருப்பதைக் காண்கிறான்.

# வாழ்க்கையின் வெற்றிக்கு நல்ல பழக்க வழக்கங்களை பேணுவோம்!

"நற்பண்புகளை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்? - முதலில் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் ஆர்வமும் ஆசையும் ஏற்பட வேண்டும். நல்ல நூல்களைக் கற்பதனாலும், நல்லோருடன் இணங்கி வாழ்வதனாலும், மற்றையோரின் உத்தம வாழ்க்கைப் பண்புகளைப் பார்த்துக் கற்றுக்கொள்வதன் மூலமும், அதேவேளை கெட்டவர்களுடன் கூட்டுச் சேர்வதில்லை என்ற உறுதிப்பாட்டினை எடுத்து அதிலிருந்து இம்மியளவும் வழுவாது நிற்பதாலும், மன வைராக்கியத்தினாலும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம்"

சரியானவற்றைச் சொல்லவும் செய்யவும் இன்று பலர் தயங்குகிறார்கள். அதனால் என்ன விளையுமோ என்ற அச்சந்தான் காரணம். ஆனால் பிழையானவற்றைச் சொல்லவும் செய்யவும் தயங்குவதையோ, அதனால் ஏற்படும் விளைவுகளையிட்டுப் பயங்கொள்வதையோ, பெரும்பாலாரிடம் காணக் கூடியதாக இல்லை. இது இன்றைய மனிதர்களின் போக்காக உள்ளது. மனிதர்களின் இத்தகைய விசித்திரப் போக்கே இன்றைய ஒழுங்கீனங்கள், நடத்தைப் பிறழ்வுகள், ஊழல்கள், பல்வேறு சமூகப் பிரச்சினைகள், முரண்பாடுகள் என்பனவற்றிற்கு உடந்தையாக உள்ளது. நன்றாகப் படித்தவர்கள், பதவியில் இருப்பவர்கள், சமூகத்தின் மதிப்பையும் கணிப்பையும் பெற்றவர்களும் கூட, பற்பல சந்தர்ப்பங்களில் சரியானவற்றையும், நீதி நியாயமானவற்றையும், சொல்லவும், செய்யவும் பயப்படுகிறார்கள் என்றால், சாதாரணமானவர்கள் எம்மாத்திரம்? இன்று பிழை செய்ய நிர்ப்பந்திக்கப்படுபவர்களும் உண்டு. அத்தகைய ஒரு நிர்ப்பந்தமோ கட்டளையோ ஊக்குவிப்போ சரியானவற்றைச் செய்ய வேண்டும் நீதியாக நடக்க வேண்டும். என்பவற்றைப் பொறுத்தளவில் காணக் கூடியதாக இல்லையே. ஒழுக்கச் சீரழிவுகளின் உச்சக்கட்டத்தில் மனிதகுலம் வந்துவிட்டமையை இது காட்டுகின்றது.

ஒழுக்கச் சீர்குலைவு எங்கு உள்ளதோ, அங்கு நல்லனவற்றின் வளர்ச்சி இருக்காது, தீயனவற்றின் பெருக்கத்திற்கே அத்தகைய சூழ்நிலை இதமாக அமைகின்றது. சமூக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என்பனவும் மனித ஒழுக்கத்தின் உறுதிப்பாட்டிலேயே தங்கியுள்ளன. ஒழுக்கம் சீர்குலைந்தால் எல்லாவித நன்முறைப்பாங்கான வளர்ச்சியும், விருத்தியும் குன்றிவிடுகின்றன. எனவேதான் சான்றோர்கள் மனித ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பி வருகிறார்கள்.

நல்லொழுக்கம் என்பது அன்றாடம் நாம் மேற்கொண்டு வரும் நல்ல பழக்கவழக்கங்கள், நற்பண்புகள் என்பவற்றிலிருந்தே கட்டியெழுப்பப்படுகிறது. நல்ல பழக்கங்கள், பண்புகள் நம்மிடமிருந்து விலகி விடைபெற்று அகன்று விடும் போதே, ஒழுக்கச் சீர்குலைவு ஏற்படுகின்றது. ஆலம் விதை மிகச் சிறியது. அந்தச் சிறிய விதையிலிருந்துதான் பென்னம் பெரிய ஆலமர விருட்சமே தோன்றுகிறது. எனவே நற்பழக்க வழக்கங்கள், நற்பண்புகள் என்பவற்றைப் பொறுத்தளவில் அவை என்ன சாதாரண பழக்க வழக்கங்கள் தானே என்று எண்ணி அவற்றை நாம் உதாசீனஞ் செய்தல் ஆகாது. அந்தச் சாதாரண பழக்க வழக்கங்கள், பின்னர் பெரிய ஒழுக்க முறைகளை அமைத்துக்கொள்ள உதவுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

எதைச் சரியானது என்று ஒருவர் உறுதியாகத் தீர்மானித்துக் கொள்கிறாரோ, அதைச் செய்ய ஒருபொழுதும் தவறக் கூடாது. தயங்கவும் கூடாது. பிறருடன் பழகும் போது, பண்பாகவும், மரியாதையுடனும். நடந்து கொள்ளுதல் அவசியம். அதுவே நல்ல குடிமக்களுக்குரிய இலட்சணம்.

நற்பண்புகளை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்? முதலில் நற்பண்புகளை -வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் ஆர்வமும் ஆசையும் ஏற்பட வேண்டும். நல்ல நூல்களைக் கற்பதனாலும், நல்லோருடன் இணங்கி வாழ்வதனாலும், மற்றையோரின் உத்தம வாழ்க்கைப் பண்புகளைப் பார்த்துக் கற்றுக்கொள்வதன் மூலமும், அதேவேளை, கெட்டவர்களுடன் கூட்டுச் சேர்வதில்லை என்ற உறுதிப்பாட்டினை எடுத்து அதிலிருந்து இம்மியளவும் வழுவாது நிற்பதாலும், மன வைராக்கியத்தினாலும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம்.

வீட்டிலே சிறுபராயத்திலிருந்து, தாய், தந்தையர் சொற்கேட்டும், மூத்தோர் பெரியோர் நற்செய்கைகளைப் பார்த்தும் நல்ல பழக்கங்களைப் பழகிக் கொள்ள வேண்டும். நல்ல பழக்கங்கள் நாளடைவில் வழக்கங்களாகி விடுகின்றன. இறுதியில் பண்பாடு ஆகிவிடுகின்றது.

நாம் பொருட்களை வீட்டில் எங்காவது வைத்துவிட்டுத் தேடி அலைவதில் வீணாகப் பொழுதைப் போக்குகிறோம். குறித்த இடங்களில் குறித்த பொருட்களை வைக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டோமானால், நினைத்த மாத்திரத்தே குறித்த பொருளை எடுத்துக் கொள்ளலாம்.

"ஆற்றிலே போடுவதானாலும் அளவறிந்து போடு" என்றொரு பழமொழி உண்டு. தினமும் நாம் செலவு செய்கின்ற பணம் தொடர்பான விடயங்களுக்குக் கணக்கு எழுதி வைக்கின்ற பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால் பல நன்மைகள் உண்டு. சிக்கனமும் வேண்டும், அதே வேளை அது உலோபித்தனமாக அமைந்து விடவும் கூடாது.

வேலை, தொழில் வேண்டுமென்கின்றோம். ஆனால் தொழில் கிடைத்து விட்டால் ஒழுங்காக வேலைத் தலங்களுக்குச் செல்வதில்லை. உரிய நேரத்திற்குச் செல்வதில்லை. வேலை நேரங்களில் வேலை செய்யாது காலத்தைக் கடத்துதல், பிறருடன் வம்பளத்தல், சக தொழிலாளர்களுடனும் வேலை தருவோருடனும் நல்லுறவு பேணாமை, வேலைத் தலங்களில் உள்ள சொத்துக்கள் பொருட்களை நாசம் செய்தல் - இப்படிப் பல கெட்ட நடவடிக்கைகளில் பலர், ஈடுபாடு கொள்வதைத் தற்காலத்தில் காண்கிறோம். தொழிலுக்கு வந்தனை செய்ய வேண்டும். எல்லோருடனும் நல்லுறவு பேண வேண்டும். கடமையில் கண்ணாயிருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் பங்கிற்குரிய பணியினைச் செவ்வனே செய்கின்ற நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் தொழில் செழிக்கும், உற்பத்தி பெருகும், நாடு வளம் பெறும்.

ஒரு கூட்டத்திற்கோ, விழாவிற்கோ சமுகமளிப்பதாகவிருந்தால், குறித்த நேரத்திற்குச் சற்று முன்னதாகவே அவ்விடத்திற்குப் போகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, உட்புகுந்து, அங்கிருப்பவர்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்தக் கூடாது. அது நல்ல பழக்கமல்ல. சிறுவர்களைக் கூட்டிச் சென்றால், அவர்கள் கூட்ட மண்டபத்தை விளையாட்டு மைதானமாக மாற்றாமல் அவர்களைக் கண்காணித்துக் கொள்ளுதல் வேண்டும். அங்கு அமர்ந்திருந்து நடைபெறும் நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருப்பவர்களுக்கு எவ்விதத்திலும் இடையூறுகளை ஏற்படுத்தக் கூடாது. சபையில் இருந்து கொண்டு மற்றவர்களுடன் கதைத்துக் கொண்டிருத்தலோ, பெரிதாகத் தாளம் போட்டுக் கொண்டிருப்பதோ, எழுந்து அங்குமிங்கும் நடமாடுவதோ நல்ல பழக்கங்களல்ல. மேடையில் இருப்பவர்களும் நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது தம்முள் உரையாடிக் கொண்டிருத்தல் நல்லதல்ல. அச் செயல் நிகழ்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவரை அவமதிப்பதாகவே அமையும்.

பலர் உள்ள சபையில் இருந்து கொண்டு, தும்முதல், கொட்டாவி விடுதல், நெட்டி முறித்தல், மூக்கைத் தோண்டிக் கொண்டிருத்தல், தலை சொறிதல், காதைக் குடைதல், கைக்குட்டையால் விசுக்குதல் போன்றவற்றைச் செய்தல் நல்ல பழக்கமோ பண்போ அல்ல.

எல்லோரும் மனிதர்களே மனிதரிடையே ஏற்றத் தாழ்வுகள் பார்ப்பது நல்ல பழக்கமன்று. வறியவர்களுக்கு உதவவேண்டும். அங்கக் குறைபாடுகள், வேறு குறைபாடுகள் உள்ளவர்களை அவர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் பரிகசித்தல், கேலி செய்தல், நொட்டை சொல்லுதல், பட்டம் தரித்தல் என்பன தவறான செயல்களாகும்.

பெரியவர்கள், மூத்தவர்கள் முன்னிலையில் வெற்றுப் பேச்சுக்களோ, அதிகப் பிரசங்கத்தனமாகப் பேசுவதோ நல்ல பழக்கமாகாது. பலர் இருக்குமிடத்தில் இரகசியம் பேசக் கூடாது. சந்தேகமாக நடந்து கொள்ளக் கூடாது. மற்றவர்களின் வீடுகளுக்குச் சென்றால், வாயிற் கதவில் மெதுவாக ஓரிருமுறைகள் தட்டிவிட்டு அல்லது அழைப்புமணியை அழுத்தி விட்டுக் கொஞ்சநேரம் பொறுத்து நிற்க வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் வேலையாக இருப்பார்கள் என்ற எண்ணம் எம்மிடம் இருக்க வேண்டும். அவதிப்பட்டுப் படபட என்று கதவில் தொடர்ச்சியாகத் தட்டுவதோ, மணியை அலற அலற அடிப்பதோ ஆகாது. அவ்வாறு செய்வதால் வீட்டிலுள்ளோரின் எரிச்சலைக் கிளப்புவதாக அது அமையும். சிலர் "வீட்டுக்காரர்" என்று உரத்துக் குரல் கொடுப்பதைக் காண்கின்றோம். இவ்வாறு கூப்பிடுதல் முறையன்று. யன்னலின் ஊடாகவோ, கதவு நீக்கல் ஊடாகவோ அல்லது வேறு விதத்திலோ திருட்டுத்தனமாக வீட்டிற்குள் எட்டிப் பார்ப்பதோ, நோட்டம் விடுவதோ அநாகரிகச் செயல் ஆகும். கதவு திறந்த பின்னரும், உள்ளே வரும்படி அழைத்தாலேயன்றி உள்ளே புகுதல் ஆகாது. உள்ளே சென்று அமர்ந்த பின்னர், அங்குள்ளவர்களின் அனுமதியின்றி வீட்டிற்குள் எழுந்து சென்று ஆராய்ச்சி நடத்தக் கூடாது. இவ்வாறு செய்தல் நல்ல பழக்கமன்று. பிள்ளைகளைக் கூட்டிச் சென்றால், அவர்களைப் பக்குவமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் அங்கு ஓர் அமர்க்களத்தையே ஏற்படுத்தி, வீட்டிலுள்ளவர்களின் பொறுமையைச் சோதிக்கும் நிலைமையை ஏற்படுத்தாதவாறு கண்காணித்துக் கொள்வது விருந்தினரின் பொறுப்பாகும்.

எம்மைவிடப் பெரியவர்கள், மூத்தவர்கள் எமது வீடுகளுக்கு வருகை தரும் போது நாம் எமது இருக்கையை விட்டெழுந்து, வணக்கம் கூறி அவர்களை வரவேற்று ஆசனங்களில் அமரச் செய்து, அவர்கள் அமர்ந்த பின்னர் நாம் அமர்தல் வேண்டும். அவர்களை ஒருபோதும் அலட்சியப்படுத்தாது கனம் பண்ணி மரியாதை செய்தல் அவசியம். அவர்கள் வந்த வேலை முடிந்து வெளியேறும் போதும், வணக்கம் கூறி, சிறிது தூரம் அவர்களுடன் சென்று அவர்களை வழிவிட்டுத் திரும்ப வேண்டும்.

நடைபாதைகளிலும், வீதிகளிலும் செல்லும் போது எதிர்கொள்பவர்களுக்கு வழிவிட்டு விலகிச் செல்லுதல் நல்ல பழக்கமாகும். கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்புதல், குப்பை கூழங்களைப் போடுதல், நடைபாதையில் கூட்டமாக நின்று கதைத்தல், புகைத்தல் முதலிய பிறருக்கு இடைஞ்சல், இடையூறுகள் தரும் செயல்களில் ஈடுபடுதல் ஆகாது.

நல்ல பழக்க வழக்கங்களை வாழ்வில் மேற்கொள்வதால் நம்மை எல்லோரும் விரும்புவர், நம்மீது அன்பு செலுத்துவர். அதனால் நாம் எடுத்த காரியங்கள் கைகூடும். நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்வதால் முரண்பாடுகள் நீங்கும். வாழ்வில் அமைதியும் வெற்றியும் கிட்டும்.

- கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

[மனித வாழ்க்கை விழுமியங்கள்]

# ஈரானில் புதிய சட்டம்

## அதிர்ச்சியில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்



ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது என்று குற்றம் சுமத்தியதுடன், அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் பொருளாதார தடையையும் விதித்துள்ளன.

இந்நிலையில் ஈரானின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் மற்றும் வெளியுறவு கொள்ளை கமிஷன் தலைவர் இப்ராஹிம் அகாஹ் முகம்மாதி, ஈரான் நாடாளுமன்றத்திற்கான மஜிலிசில் மசோதா ஒன்றை கொண்டுவந்தார்.

அதில் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி, பொருளாதரா தடையும் விதித்துள்ளனர். அதற்கு பதிலடியாக பாரசீக வளைகுடாவின் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்மூஸ் கால்வாயினை மூட வேணடும் என வலியுறுத்தினார். இதற்கு 290 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 100 பேர் ஒப்புதல் அளித்தனர்.

ஹோர்மூஸ் கால்வாய் வழியாகவே ஆசிய, ஐரோப்பிய நாடுகள் தங்களது எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் பயங்கரவாத நாடாக மாறப் போகிறது

## அமெரிக்கா எச்சரிக்கை

ஆப்கானிஸ்தான் விடயத்தில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுகிறது என அமெரிக்கா குற்றம் சுமத்தி உள்ளது.

ஹக்கானி பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளை துண்டிக்குமாறு அமெரிக்க தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அமெரிக்காவின் நிதி உதவியை பெறுவதற்காக நடவடிக்கை எடுப்பதுபோல் நடித்து விட்டு, ஆப்கான் தலிபான்களுக்கு பாகிஸ்தான் உதவுகிறது என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

"முடங்கிய, குழப்பமான பாகிஸ்தான்" என்ற தலைப்பிலான தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தும் விசயங்களை பாகிஸ்தான் தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

பாகிஸ்தானிலிருந்து ஆப்கானுக்குச் சென்று அமெரிக்க படையினர் மீது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதக் குழுவைக் கட்டுப்படுத்தமாறு பலமுறை கோரியும் அதை கேட்கவேயில்லை.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது ஒரு பொது நோக்கத்துக்கான விசயம் என்பதை பாகிஸ்தான் உணர வேண்டும். ஆனால் பாகிஸ்தானின் இராணுவ தலைவர்கள் இதை உணர்வதேயில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஹக்கானி குழுக்களுடனான தொடர்பை துண்டித்துக் கொள்ளவும் தயாராக இல்லை. இந்த குழுக்கள்தான் ஆப்கானில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மிகப் பெரும் சவாலாக விளங்குகின்றது என்றும் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானால் நாளுக்கு நாள் அரசியல் சூழல் மிகவும் மோசமாகி வருகிறது. மொத்தத்தில் அரசு எந்திரம் செயலிழந்து விட்டது.

இதனாலேயே எல்லை விவகாரத்தில் அவசரமான முடிவு எடுக்க வேண்டியிருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் பாகிஸ்தான் ஹக்கானி குழுவுடன் தொடர்பை தொடர்ந்து வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு வலுவான நாடாக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள பாகிஸ்தானுக்கு வாய்ப்பாக அமெரிக்காவுடன் வலுவான உறவு இருந்தது.

ஆனால் அதை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ள தவறி விட்டது. அல்கொய்தா பயங்கரவாதிகளையும், தலிபான்களையும் அப்போது அழித்திருந்தால் இப்போது தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் இருந்திருக்காது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஹக்கானி குழுவை பயங்கரவாத இயக்கமாக சேர்க்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் வலியுறுத்தி வருகின்றனர். அவ்விதம் அறிவித்தால் பாகிஸ்தானே பயங்கரவாத நாடாக மாறி விடும்.

இதனால் அந்நாட்டுக்கு அளிக்கப்படும் உதவிகள் முற்றிலுமாக நிறுத்த வேண்டிய சூழல் உருவாகும் என்று கூறப்பட்டது. இந்நிலையில் அமெரிக்க அரசுக்கு வேறு வழியில்லாமல் பாகிஸ்தான் அரசை நிர்பந்திப்பது, இராணுவத்துக்குத் தேவையான உதவிகளை அளிப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே அமைதிப் பாதைக்குத் திரும்புமாறு தலிபானுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது குறித்து பேச்சு நடத்தவும் அமெரிக்கா தயாராக உள்ளது.

இதனால் 2014ஆம் ஆண்டில் அமெரிக்க படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறிய பிறகு அங்கு அமைதியான சூழல் நீடிக்கும் என நம்புகிறது.

# உலக பார்வை

# பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி

## முஷாரப் பரபரப்பு தகவல்



பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படும் நிலை உள்ளதாக அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் வசித்து வரும் பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் உள்ள ஆஸ்பென் நகரில் உரை நிகழ்த்தினார்.

அவர் பேசியதாவது, பாகிஸ்தான் பழைய நிலைக்கு(இராணுவ ஆட்சி) திரும்பிக் கொண்டிருக்கிறது. நாட்டைக் காப்பாற்றுவதற்கு மக்கள், இராணுவத்தையே மீண்டும் நாடுகின்றனர்.

பாகிஸ்தானின் அரசியல் சட்டம் மிகவும் புனிதமானது. எனினும் அதற்கு மாறாக (இராணுவ ஆட்சி) எதையாவது செய்தால் மட்டுமே நாட்டைக் காப்பாற்ற முடியும். நாம் அதைச் செய்யப் போகிறோமா? அல்லது அரசியல் சட்டத்தைத் தாங்கிப் பிடித்து, நாட்டைக் கவிழ விடப் போகிறோமா?

நான் எனது சொந்த விருப்பப்படி தாய்நாட்டிற்கு நிச்சயம் திரும்புவேன்.

என்னை இன்டர் போல் மூலம் கைது செய்ய வேண்டும் என்று பாகிஸ்தானில் பலராலும் கோரப்படுகிறது.

எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. இந்த ஆண்டில் தேர்தல் நடக்கும் என்று நான் கருதுவதால் நிச்சயம் நான் திரும்புவேன். கைதாவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

உயிருக்கு ஆபத்து என்றாலும் அதைப் பொருட்படுத்தாமல் நாடு திரும்புவேன் என்று கூறியுள்ளார்.



வெனிசுலா அதிபரான ஹுகோ சாவேஸ் அதிபர் தேர்தலை முன்னிட்டு பிரச்சாரத்தின் போது தனது ஆதரவாளர்களை சந்தித்தார்.

## வரியை உயர்த்தியதன் எதிரொலி:

# 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி இராஜினாமா



ஜப்பானில் தற்போது ஜனநாயக கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது, பிரதமராக யோசிஹிகோ நோடா பதவி வகிக்கிறார்.

இந்நிலையில் அவர் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க 10 சதவீதம் விற்பனை வரியை உயர்த்த தீர்மானித்தார்.

இதற்கான மசோதா நாடாளுமன்ற கீழ் சபையில் தாக்கல் செய்து நிறைவேறியது. நாடாளுமன்ற மேல் சபையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

இந்நிலையில் ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இஷிரோ ஒசாவா இந்த வரி உயர்வுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

அவரும், அவருடைய ஆதரவாளர்களான 52 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளுங்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். இதில் கீழ்சபை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேரும், மேல்சபை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12 பேரும் ஆவார்கள்.

இதனால் மொத்தம் 480 உறுப்பினர்களை கொண்ட கீழ்சபையில் ஆளுங்கட்சியின் பலம் 289-ல் இருந்து 249 ஆக குறைகிறது. தனி பெரும்பான்மைக்கு மேல் அதிக இடம் இருப்பதால் தற்போது ஆட்சிக்கு ஆபத்து எதுவும் இல்லை.

# குழந்தையின் கைகளை துண்டித்த பாட்டி

## சீனாவில் கொடூரம்



சீனாவில் வயதான மூதாட்டி ஒருவர் 8 மாத குழந்தையின் கைகளை வெட்டி பின், தற்கொலைக்கு முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவின் சாங்டோங் மாகாணத்தில் குழந்தையை பாட்டியின் பராமரிப்பில் விட்டுவிட்டு, தாய், தந்தை இருவரும் தங்களது பணிக்குச் சென்று விட்டனர்.

இந்நேரத்திலேயே பாட்டி குழந்தையின் கைகளை துண்டாக வெட்டி உள்ளார். அதன் பின் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

பணிக்கு சென்று திரும்பிய பெண், குழந்தை இரத்த வெள்ளத்தில் கிடந்ததை பார்த்து துடிதுடித்துப் போனார்.

சுமார் 12 மணி நேரப் போராட்டத்திற்கு பின், குழந்தையின் கைகள் மீண்டும் இணைக்கப் பட்டது.

இந்நிலையில் பாட்டி கோமா நிலையில் இருப்பதால், அவரிடம் இருந்து எந்த தகவலையும் பெற முடியவில்லை.

# ராஜினாமாவை 9 அமைச்சர்கள் திரும்ப பெற்றனர்: கர்நாடக அரசியலில் புதிய திருப்பம்



கர்நாடக முன்னாள் முதல்வர் பி.எஸ். எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் 9 பேரும் தங்களது ராஜினாமா கடிதங்களை நேற்று திரும்பப் பெற்றதனால் கர்நாடக அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கர்நாடக முதல்வர் பதவியில் இருந்து சதானந்த கவுடாவை நீக்கக் கோரி, எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் 9 பேர் ஜுன் 29-ம் திகதி தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர்.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண பாஜக மேலிடம் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் தர்மேந்திர பிரதானை பெங்களூருக்கு அனுப்பிவைத்தது.

கடந்த 30-ம் திகதி பெங்களூர் வந்த அவர், கர்நாடக முதல்வர் சதானந்த கவுடா, முன்னாள் முதல்வர் எடியூரப்பா, பாஜக மாநிலத் தலைவர் கே.எஸ்.ஈஸ்வரப்பா, ராஜினாமா செய்த 9 அமைச்சர்களிடமும் தனித்தனியே கருத்துகளைக் கேட்டறிந்தார். ஆனால், அவர் மேற்கொண்ட முயற்சி வெற்றியைத் தரவில்லை.

இந்நிலையில், 9 அமைச்சர்களும் ராஜினாமா கடிதங்களை திரும்பப் பெற்றால் மட்டுமே கோரிக்கைகள் குறித்து பேச்சு நடத்த முடியும் என பாஜக மேலிடம் எடியூரப்பா கோஷ்டியினருக்கு எச்சரிக்கை விடுத்தது.

மேலும், டெல்லியில் இன்று (ஜுலை 3) நடைபெறும் நாடாளுமன்ற பாஜக குழுக் கூட்டத்தில் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என்றும், இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு சதானந்த கவுடா, எடியூரப்பா, ஈஸ்வரப்பா கோஷ்டியினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனிடையே கர்நாடக முதல்வர் மாற்றம் தொடர்பான கோரிக்கையை மூன்று நாள்களில் பரிசீலிப்பதாக மேலிடம் உறுதி அளித்து, டெல்லி வருமாறு கேட்டுக் கொண்டதால் 9 அமைச்சர்களும் தங்கள் ராஜினாமா கடிதங்களைத் திரும்பப் பெற முடிவு செய்துள்ளதாக ஜெகதீஷ்ட்டர் கூறினார்.

லிங்காயத்து சமுதாயத்தைச் சேர்ந்த ஜெக்தீஷ் ஷெட்டரை முதல்வராக்கும்படி எடியூரப்பா கோரி வருகிறார். வாக்கு வங்கியாக திகழும் லிங்காயத்து சமுதாயத்தைச் சேர்ந்தவரின் தலைமையில் அடுத்த சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்க பாஜக திட்டமிட்டுள்ளதால், அடுத்த முதல்வராக ஜெகதீ ஷெட்டரை நியமிக்கும் வாய்ப்புள்ளதாக பாஜக வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜேட்லி, நேற்று எடியூரப்பாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி கோரிக்கைகளை பரிசீலிப்பதாக உறுதியளித்தன் பேரில் அமைச்சர்கள் தங்கள் ராஜினாமாவை வாபஸ் பெற முடிவு செய்ததாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழலுக்கு துணை போகாததால் கர்நாடக முதல்வர் பதவியிலிருந்து என்னை நீக்க முயற்சி நடக்கிறது.

எனினும் 9 அமைச்சர்கள் ராஜினாமா கடிதங்களை திரும்பப் பெற்றதை வரவேற்கிறேன்.

கட்சியில் எழுந்துள்ள பிரச்னைக்கு மேலிடம் தீர்வு காணும். கட்சி மேலிடத்தின் முடிவுக்கு கட்டுப்படுவேன் என்று முதல்வர் சதானந்த கௌடா தெரிவித்துள்ளார்.

# இந்திய செய்திகள்

## மகளின் கருணைக் கொலைக்கு அனுமதி கோரும் தாய்!



மாற்றுத் திறனாளியான தனது மகளை கருணைக் கொலை செய்ய அனுமதிக்குமாறு, ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் அவரது தாய் மனு அளித்துள்ளார்.

மதுரை மாவட்டம், ஆரப்பாளையத்தைச் சேர்ந்தவர் அழகர் (44). இவரது மனைவி ஜெயா (32). இவரது சொந்த ஊர் கும்பகோணம். இத் தம்பதியினருக்கு 1999-ல் பெண் குழந்தை பிறந்தது. பிறந்தது முதலே மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த இக் குழந்தைக்கு பல இடங்களில் சிகிச்சை அளித்தும் குணமாகவில்லை.

இப்போது 14 வயதை அடைந்த நிலையில் இச் சிறுமியை 24 மணி நேரமும் யாராவது ஒருவர் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. இரவு நேரங்களில் இச் சிறுமி அதிக சப்தத்துடன் அழுவதால் அருகில் வசிப்பவர்களுக்கும் இத் தம்பதிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்படுகிறது.

இதனால் மனமுடைந்த ஜெயா, தனது மாற்றுத்திறனாளி மகளுடன் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்தார். தனது மகளை கருணைக் கொலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று ஆட்சியர் அலுவலக அதிகாரிகளிடம் திங்கள்கிழமை மனு அளித்தார்.


ஜெயா கூறுகையில், பிறந்தது முதலே எனது மகள் பகலில் தூங்குகிறார். இரவு நேரங்களில் கூச்சலிடுகிறார். இதனால், இரவு நேரங்களில் யாராவது ஒருவர் விழித்திருக்க வேண்டிய நிலை உள்ளது. படுத்த படுக்கையாக இருப்பதால் கட்டிலிலேயே காலைக் கடன்களை கழித்துவிடுகிறார். நான் இருக்கும்வரை மகளைப் பார்த்துக்கொள்ள முடியும்.

பருவ வயது அடைந்த மகளை எனது கணவர் உள்பட எந்த ஆணும் பார்த்துக் கொள்வது இயலாத காரியம். எனது மகளைப் பாதுகாக்கும்படி ஈரோடு, திருச்சி, கும்பகோணம், மதுரை, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட இடங்களில் உள்ள தொண்டு நிறுவன இல்லங்களில் விண்ணப்பம் அளித்துள்ளேன்.

நடக்கும் நிலையில் இருக்கும் மாற்றுத் திறனாளி சிறுமியைப் பார்த்துக்கொள்வோம். ஆனால், படுத்த படுக்கையாக இருப்பவரைப் பார்த்துக் கொள்ளமாட்டோம் எனக் கூறிவிட்டனர். இதனால்தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்தேன் என்றார்.

# ரேர்னிங் பாயிண்ட்ஸ் புத்தகத்தினால் சர்ச்சை; அப்துல் கலாம் சுயநலமிக்கவர்

## பால்தாக்கரே பகிரங்க குற்றச்சாட்டு



முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் போலி வேஷக்காரர், சுயநலமிக்கவர் என்று சிவசேனா தலைவர் பால் தாக்கரே கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி அப்துல் கலாம் டேர்னிங் பாயிண்ட்ஸ் என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் முக்கிய முடிவுகள் எப்படி எடுக்கப்பட்டது குறித்து கலாம் இப்புத்தகத்தில் எழுதியுள்ளார்.


இதன் அடிப்படையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றதையடுத்து சோனியாவை தாம் பிரதமராக்க விரும்பியதாகவும் இருப்பினும் சோனியா கேட்டுக்கொண்டதன் காரணத்தினால் மன்மோகனை பிரதமராக்கியதாகவும் எழுதியுள்ளார்.

இதற்கு நாடு முழுவதும் அரசியல் தலைவர்கள் மத்தியில் எதிர்ப்பு எழுந்து வருகின்றன. இதுகுறித்து சிவசேனா தலைவர் பால்தாக்கரே, இத்தாலிய நாட்டை சேர்ந்தவரான சோனியா காந்தியை இந்தியாவின் பிரதமராக்குவதில் ஆட்சேபனை இல்லை என கலாம் கூறியிருப்பது அவரை கேலிக்கு ஆளாக்கியுள்ளது.

அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர் மீது அனைவரும் மரியாதை வைத்திருந்தனர். அவரது பதவி காலம் முடிவடைந்தாலும் அவர்மீதான மதிப்பும் மரியாதையும் குறையாமல் இருந்தது. மேலும், கலாமின் அனுமதி கிடைக்காததால்தான் சோனியா பிரதமராகவில்லை என மக்கள் நினைத்திருந்தனர்.


ஆனால் அவரது புத்தகத்தில் இதுகுறித்து அவர் எழுதியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 வருடங்களாக அவர் இதனை வெளியிடாதது அவர் சுயநலமிக்கவர் மற்றும் போலி வேஷக்காரர் என்பதை காட்டுகிறது என கூறியுள்ளார்.



ஒரு மாத காலதாமதத்திற்கு பிறகு குற்றாலத்தின் சீசன் துவங்கியுள்ளது. பிரதான அருவியில் கொட்டிய தண்ணீரில் குளித்து மகிழ்ந்த பயணிகள்.

# யு.பி.எஸ்.சி தேர்வு வினாக்கள் தமிழில் வேண்டும்: கருணாநிதி வேண்டுகோள்



அகில இந்திய பணிகளுக்கான தேர்வுகளை மத்திய தேர்வாணையம் (யுபிஎஸ்சி) நடத்தி வருகின்றன. இந்த தேர்வுகள் முதல்நிலை தேர்வு, பிரதான தேர்வு, நேர்முக தேர்வு என 3 கட்டங்களாக நடத்தப்படுகின்றன.

எழுத்து தேர்வுகளில் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டும் கேள்விகள் இடம்பெறுகின்றன. இதனால் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கிலத்தில் பதில் அளிக்கின்றனர். ஆனால், இந்தி பேசும் மாநிலங்களை சேர்ந்தவர்கள் தாய்மொழியிலேயே தேர்வெழுதுகின்றனர்.

இதுபோன்ற சூழ்நிலை இருந்தாலும், தமிழக மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்வெழுதி கணிசமான அளவில் வெற்றி பெற்று வருகின்றனர்.

முதல் நிலை தேர்வு 2 மணி நேரம் நடத்தப்படுகிறது. ஆங்கில மொழியில் சிறந்து விளங்கும் மாணவர்களால் மட்டுமே முதல் நிலை தேர்வை குறிப்பிட்ட நேரத்துக் குள் தேர்வெழுத முடியும்.

ஆனால், ஆங்கிலத்தில் உள்ள கேள்வி களை புரிந்து கொள்வது பலருக்கு கடினமாக உள்ளது. ஆங்கிலத்தில் உள்ளது போலவே இந்தியிலும் கேள்விகள் தரப்படுகின்றன. இந்தி தெரிந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெறுகின்றனர்.

ஆங்கிலம், இந்தியில் மட்டும் கேள்விகள் கேட்கும் நிலை நீடித்தால், தேர்வில் வெற்றி பெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து சரிந்து கொண்டே போகும். எனவே, ரயில்வே போர்டு தமிழிலும் தேர்வு நடத்துவது போல யுபிஎஸ்சி தேர்வுகளும் தமிழிலும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கருணாநிதி கூறியுள்ளார்.

## தாய் மீது எச்சில் துப்பிய மூதாட்டியை கட்டையால் அடித்து கொன்ற மகன்

தனது தாய் மீது எச்சில் துப்பிய மூதாட்டியை கட்டையால் அடித்து கொலை செய்த மகனை போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம் காங்கயத்தை அடுத்த பொடாரம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் லோகநாதன், இவரது மனைவி மரகதம் (60). லோகநாதன் வசிக்கும் அதே தெருவில் அவரது உறவினர் நடராஜ் குடும்பத்துடன் வசித்துவருகிறார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடராஜின் மனைவி சரஸ்வதி, தெருவில் நடந்து சென்றார். அப்போது வீட்டிற்குள் இருந்த மரகதம், தெருவை நோக்கி துப்பி உள்ளார். இதில் எதிர்பாராதவிதமாக, மரகதம் துப்பியது சரஸ்வதியின் மீது பட்டுவிட்டது. இதை சரஸ்வதி தட்டிக்கேட்டார்.

இதனால் மரகதம், சரஸ்வதி இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த நிலையில் சத்தம் கேட்டு அங்கு வந்த சரஸ்வதியின் மகன் பாஸ்கரன் (26), தனது தாய்க்கு ஆதரவாக பேசினார். மேலும் ஆத்திர மடைந்த அவர், அங்கிருந்த கட்டையால் மரகதத்தின் தலையில் தாக்கினார்.


இதில் தலையில் பலத்த காய மடைந்த மரகதம், சம்பவ இடத்தி லேயே பலியானார். இது குறித்து தகவல் அறிந்த காங்கயம் போலீஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றினர். மேலும் மூதாட்டியை அடித்து கொலை செய்த பாஸ்கரனை கைது செய்தனர். இது குறித்து வழக்கு பதிவு செய்த காங்கேயம் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.


# செரீனா,பெடரர் காலிறுதியில் ஷெரபோவா வெளியேறினார்


விம்பிள்டன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினார்.

லண்டனில் நடந்துவரும் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், கஸகஸ்தானின் யாரோஸ்லாவா ஷிவ்தோவாவை சந்தித்தார்.

முதல் செற்றை 6-1 என மிகச் சுலபமாக கைப்பற்றிய செரீனா, இரண்டாவது செற்றை 2-6 என எளிதாக கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் செரினா 7-5 என போராடி தன்வசப்படுத்தினார். இறுதியில் செரீனா 6-1, 2-6, 7-5 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.







**கிவிட்டோவா வெற்றி**

மற்றொரு போட்டியில் "நடப்பு சம்பியன்" செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, இத்தாலியின் பிரான் சஸ்காஷிய வோனை சந்தித்தார். முதல் செட்டை 4-6 என இழந்த கிவிட்டோவா, இரண்டாவது செற்றில் எழுச்சி கண்டு 7-5 என பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் மீண்டும் அசத்திய கிவிட்டோவா 6-1 என கைப்பற்றினார். இறுதியில் கிவிட்டோவா 4-6, 7-5, 6-1 என்ற செற்கணக்கில் போராடி வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**வெளியேறினார் ஷெரபோவா**

மற்றொரு நான்காவது சுற்றுப் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷெரபோவா, ஜேர்மனியின் சபின் லிசிக்யை எதிர்கொண்டார். இதில் ஷெரபோவா 4-6, 3-6 என்ற நேர் செற்கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார். மற்றொரு ஆட்டத்தில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், ஜேர்மனியின் கெர்பரிடம் 1-6, 1-6 என்ற நேர் செற்கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

மற்ற போட்டிகளில் ஆஸ்திரியாவின் தமிரா பசக், போலந்தின் அக்னீஸ்கா ரத்வான்ஸ்கா ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர்.

**பெடரர் முன்னேற்றம்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பெல்ஜியத்தின் சாவியர் மாலிசியை சந்தித்தார். முதலிரண்டு செட்டை 7-6, 6-1 எனக் கைப்பற்றி பெடரர், மூன்றாவது செற்றை 4-6 என கோட்டைவிட்டார். பின் எழுச்சி கண்ட பெடரர் நான்காவது செற்றை 6-3 என தன்வசப்படுத்தினார். இறுதியில் பெடரர் 7-6, 6-1, 4-6, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

# தேசிய மட்ட பீச் கரப்பந்து குருணாகலிடம் யாழ். தோற்றது

வலிகாமம்

யாழ். மாவட்டத்தில் இருந்து சென்ற பெண் வீராங்கனைகளின் பீச் கரப்பந்தாட்ட அணி கடும் பிரயத்தனத்தை மேற்கொண்ட போதிலும் பீச் கரப்பந்தாட்ட ஆட்டத்தில் அனுபவம் இன்மை காரணமாக முதல் சுற்றிலேயே தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தேசிய மட்டத்தில் நடைபெறும் பிச் கரப்பந்தாட்டப் போட்டி நீர் கொழும்புக்கடற்கரையில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் குருணாகல் தேசிய இளைஞர் சேவைகள்மன்ற அணியும் மோதிக்கொண்டன.

யாழ்.மாவட்ட அணி முதல் தடவையாக ஒரு பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டதுடன் இதற்க்கான பயிற்சியைக்கூட பெறாத அணியாக கலந்துகொண்ட போதிலும் எதிரணிக்கு தம்மாலான எதிர்ப்பினைக் காட்டி தோல்வியைத் தழுவிக் கொண்டார்கள்.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை குருணாகல் மாவட்ட தேசிய சேவைகள் மன்ற அணி 21 க்கு 15 21க்கு 16 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றிபெற்று இரண்டாம் சுற்றில் விளையாட தகுதி பெற்றது.

யாழ். மாவட்ட அணியைப் பொறுத்தவரையில் முதல் தடவையாக பிச் கரப்பந்தாட்டப் போடடியில் கலந்து கொண்ட நிலையிலும் தமது தோல்வியைக் கூட கௌரவமான தோல்வியாக பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.



வடமாகாணத் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்கள் கல்லூரி அதிபர் ஆசிரியருடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம்

# நியூசிலாந்துக்கு எதிரான தொடரை வென்றது மேற்கிந்தியத்தீவு

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது "ருவென்ரி-20" போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி 61 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் வெஸ்ட் இண்டீஸ் அணி இரண்டு போட்டிகள் கொண்ட "ருவென்ரி-20" தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.

அமெரிக்கா சென்ற நியூசிலாந்து, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச "ருவென்ரி-20" தொடரில் பங்கேற்றன. லாடர்ஹில் (புளோரிடா) நகரில் நேற்று நடந்த இரண்டாவது போட்டியில், "டாஸ்" வென்ற வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் டேரன் சமி, பேட்டிங் தேர்வு செய்தார்.

கெய்ல் அரைசதம்:

முதலில் துடுப்பெடுத்தாடிய வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு டுவைன் ஸ்மித் (13) ஏமாற்றினார். பின் இணைந்த கிறிஸ் கெய்ல், ஜான்சன் சார்லஸ் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. இரண்டாவது விக் கெட்டுக்கு 72 ரன்கள் சேர்த்த போது சார்லஸ் (36) அவுட்டா னார். அபாரமாக ஆடிய கெய்ல், அரைசதம் அடித்தார். இவர், 53 ரன்கள் எடுத்திருந்த போது ஆட்டமிழந்தார். சிம்மன்ஸ் (18), டேரன்சமி (13) பெரிய அளவில் சோபிக்கவில்லை. டுவைன் பிராவோ ($35^*$) ஓரளவு கைகொடுக்க, வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 177 ஓட்டங்களை எடுத்தது. நியூசிலாந்து சார்பில் நாதன் மெக்கலம் 2 விக்கெட் வீழ்த்தினார்.



**நரைன் துல்லியம்:**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு மார்டின் கப்டில் (18) ஏமாற்றினார். அடுத்து வந்த ராப் நிகோல் (7), டிம் சவுத்தி (3), கேப்டன் வில்லியம்சன் (6), டீன் பிரவுன்லி (1) நிலைக்கவில்லை. "மிடில்-ஆர்டரில்" களமிறங்கிய டேனியல் பிளைன் (22), டாம் லாதம் (19), நாதன் மெக்கலம் (14), பிரேஸ்வெல் (20) பெரிய அளவில் சோபிக்கவில்லை. நியூசிலாந்து அணி 18.4 ஓவரில் 116 ரன்களுக்கு சுருண்டு தோல்வி அடைந்தது. சுழலில் அசத்திய சுனில் நரைன் 4, டுவைன் பிராவோ, சாமுவேல்ஸ் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். ஆட்டநாயகன் விருதை வெஸ்ட் இண்டீசின் சுனில் நரைன், தொடர் நாயகன் விருதை வெஸ்ட் இண்டீசின் கிறிஸ்கெய்ல் பெற்றனர்.

# பீச் கரப்பந்தாட்டம் யாழில் இருந்து நால்வர்

வலிகாமம்

யாழ். மாவட்டத்தில் இருந்து முதல் தடவையாக பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்ககாக வீரவிராங்கனைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கலந்துகொண்டுள்ளார்கள்.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய மட்டத்தில் நடத்தும் பீச் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்க்காகய யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த இரண்டு விரர்களும் இரண்டு வீராங்கனைகளும் கலந்து கொண்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் இருந்து ஆண் வீரர்களாக டஜித் தனுரதன் ஆகியுயோரும் பெண் விராங்கனைகளாக மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த பிரதஞ்ஜா சஜித்தாவம் கலந்துகொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் நடுவர் பரிசீலனைத் திட்டம்: பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவுக்கெதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தைப் பயன்படுத்த விரும்புவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளது. நடுவர் பரிசீலனைத்திட்டத்திற்குத் தாங்கள் ஆதரவாகக் காணப்படுவதாகவும் அச்சபை அறிவித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த மாநாட்டில் நடுவர் பரிசீலனைத் திட்டத்தைக் கட்டாயப்படுத்த சர்வதேசக் கிரிக்கெட் சபை மறுத்திருந்த நிலையிலும் தாங்கள் தொடர்ந்தும் நடுவர் மறுபரிசீலனைத் திட்டத்திற்கு ஆதரவாகக் காணப்படுவதாக அச்சபை தெரிவித்துள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முடிவு காரணமாக நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செலவுகளை அக் கிரிக்கெட் சபையே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் அதற்கான அனுசரணையாளர் ஒருவரைத் தேடுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் கிரிக்கெட்டிற்கும், நடுவர்களுக்கும் உதவியாக அமைந்துள்ளதாகக் கருதுவதாகவும் அக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கெதிராக இலங்கையில் இடம்பெற்றுவரும் டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டியில் ஏராளமான நடுவர்களின் தவறுகள் இடம்பெற்றிருந்த நிலையில் அவற்றில் பெரும்பாலான தவறுகள் பாகிஸ்தானுக்கு எதிராக அமைந்திருந்தன.

இந்நிலையில் இலங்கைக்கெதிராக அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற தொடரில் நடுவர் மறுபரிசீலனைத் திட்டத்தைத் தாங்கள் கொண்டிருந்ததாகவும், அப்போது தங்களுக்கு அதற்கான அனுசரணையாளர் கிடைக்கப் பெற்றிருந்ததாகவும் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இடம்பெற்றுவரும் இலங்கைத் தொடரில் நடுவர் மீள்பரி சீலனைத் திட்டம் பயன்படுத் தப்படாமைக்கான காரணங்களை உணர்ந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.



வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இரண்டாம் இடத்தை மாகாண மட்டத்தில் பெற்றுக் கொண்டது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 04.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது